
முரசு :13 ஒலி: 196
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
Reg. No.CB/100/2024-2026
RNI Regn. No. TNTAM/2016/75063
மாலை முரசு
கோவை
WWW.MALAIMURASU.COM
திங்கட்கிழமை
19-08-2024 (ஆவணி-3)
★

## இன்று மாலை செல்கிறார்: தமிழக கவர்னர்

# ஆர்.என்.ரவி அவசரமாக டெல்லி பயணம்!

## பதவி நீட்டிப்பு தொடர்பாக மோடி, அமித்ஷாவை சந்திக்கிறார்!!



சென்னை, ஆக. 19–

தமிழ்நாடு கவர்னர் ஆர். என். ரவி இன்று மாலை அவசரமாக டெல்லி புறப்பட்டு செல்கிறார். அவரது பதவி நீட்டிப்பு குறித்து பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரை சந்தித்து பேசுகிறார்.

தமிழ்நாடு கவர்னர் ஆர். என். ரவியின், பதவி காலம் கடந்த ஜூலை 31–ஆம் தேதியுடன் முடிவடைந்தது. அதையடுத்து அவருக்கு பதவி நீடிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மத்திய அரசிடம் இருந்து இதுவரையில் கவர்னரின் பதவி காலம் நீடிப்பு குறித்து எந்த தகவலும் வரவில்லை. அதோடு தமிழ்நாட்டிற்கு புதிய கவர்னர் நியமனம் பற்றிய அறிவிப்பும், இதுவரையில் வரவில்லை.

எனவே கவர்னர் ஆர். என். ரவி, மத்திய அரசிடம் இருந்து முறையான அறிவிப்பு வரும் வரையில், தமிழ்நாடு கவர்னராக நீடிப்பார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் டெல்லியில் அனைத்து மாநில கவர்னர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாடு கவர்னர்

6–ம் பக்கம் பார்க்க



திருமூர்த்தி அணையில் இருந்து 2–ம் மண்டல பாசனத்திற்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தண்ணீரை திறந்து வைத்தார். உடன் கலெக்டர் கிறிஸ்துராஜ், ஈஸ்வரசாமி எம்.பி., மாவட்ட தி.மு.க. செயலாளரும் 4–ம் மண்டல தலைவருமான பத்மநாபன், மாவட்ட அவை தலைவர் ஜெயராம கிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

## சிவ்தாஸ் மீனா மாற்றம் எதிரொலி:

# புதிய தலைமைச் செயலாளராக நா.முருகானந்தம் நியமனம்!

சென்னை, ஆக.19–

தமிழக அரசின் தலைமைச் செயலாளராக பணியாற்றி வந்த சிவ்தாஸ் மீனா, ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து தமிழக அரசின் 50–ஆவது தலைமைச் செயலாளராக நா. முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் கட்டிடங்கள், மனைப்பிரிவு திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்காக தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் தொடங்கப்பட்டது.

இந்த ஆணையம் தொடங்கப்பட்ட நிலையில், முதல் தலைவராக 2019–ஆம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் தேதி முன்னாள் தலைமைச் செயலர் கே.ஞானதேசிகன் நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலம் இந்த ஆண்டு பிப்ரவரி 10–ஆம் தேதி முடிவடைந்தது.

இந்நிலையில், புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்வுக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு, கடந்த ஜூலை மாதம் தனது பரிந்துரையை அளித்தது.

அந்த பரிந்துரைகளை கவனமாக பரிசீலித்த தமிழக அரசு, ஆளுநரின் ஒப்புதலை பெற்று, தற்போது தலைமைச் செயலராக உள்ள சிவ்தாஸ் மீனாவை தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக நியமித்து உத்தரவிட்டுள்ளது.

கடந்த1989ம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியான சிவ்தாஸ் மீனா, ராஜஸ்தானைச் சேர்ந்தவர். இவர் கடந்தாண்டு ஜூன் மாதம் தமிழக தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டார். இவர் வரும் அக்டோபர் மாதம் ஓய்வு பெற உள்ள நிலையில், தற்போது



ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1989ல் காஞ்சிபுரம் துணை ஆட்சியராக பணியைத் தொடங்கிய சிவ்தாஸ் மீனா, கடந்த 2017–ஆம் ஆண்டு மத்திய அரசுப் பணிக்கு சென்றார். தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைந்ததும், தமிழக பணிக்கு அழைத்து வரப்பட்டார்.

இங்கு நகராட்சி நிர்வாகத் துறை செயலராக இருந்த நிலையில், புதிய தலைமைச்செயலராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனாவுக்கு தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ள நிலையில், புதிய தலைமைச் செயலராக முதல்வரின் செயலராக உள்ள 1991–ஆம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியான நா.முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

நா. முருகானந்தம் சென்னையைச் சேர்ந்தவர் அவர் 1991–ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரியானார். அவர் நிதி, தொழில், போக்குவரத்து, பொதுப்பணித்துறை, நகர மற்றும் ஊரக மேம்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை உள்ளிட்ட பல இலாகாக்களை கவனித்துள்ளார்.

# பேருந்தில் வைத்து 16 வயது சிறுமி கற்பழிப்பு!

## ஓட்டுநர், நடத்துனர் உள்பட 5 பேர் கும்பல் வெறிச் செயல்!!

டேராடூன், ஆக.19–

பேருந்தில் வைத்து 16 வயது சிறுமி கற்ப்பழிக்கப்பட்டார். பேருந்து ஓட்டுநர், நடத்துநர் உள்பட 5 பேர் கொண்ட கும்பல் இந்த வெறிச் செயலில் ஈடுபட்டனர்.

உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் நடந்த இச் சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:–

உத்தரகாண்ட் மாநிலம் பட்டியாலாவில் இருந்து இரவில் 16 வயது சிறுமி அரசு பேருந்தில் டேராடூனுக்கு பயணம் செய்தார். நள்ளிரவில் அந்த பேருந்து டேராடூன் நகரை வந்தடைந்தது. ஆனால் ஓட்டுநர் பேருந்தை பஸ் நிலையத்தில் நிறுத்தாமல் ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குபுறமான இடத்தில் நிறுத்தினார். அப்போது பேருந்தில் பயணிகள் இல்லை. சிறுமி மட்டுமே இருந்தார். இந்த சந்தர்ப்பத்தை பயண்படுத்திக் கொண்ட ஓட்டுநர் தர்மேந்திர குமார் (வயது 32), நடத்துநர் தேவேந்திரகுமார் (வயது 52), மற்றும் டிக்கெட் கவுண்டர் காசாளர் ராஜேஷ்குமார் சொங்கர் (வயது 36), மற்றும் ஒப்பந்த ஓட்டுநர் ரவிக்குமார் (வயது 34), ராஜ்பால்சிங் (வயது 57), ஆகிய 5 பேரும் சேர்ந்து அந்த சிறுமியை கற்பழித்தனர்.

இச்சம்பவம் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு நடைபெற்றது. ஆனால் அந்த சிறுமி இது குறித்து யாரிடமும் தெரிவிக்கவில்லை. பின்னர் இச்சம்பவம் சைல்டு லைன் அமைப்புக்கு தெரியவந்தது. இது குறித்து அவர்கள் போலீசில் புகார் செய்தனர். எனவே போலீசார் வழக்குப் பதிவு செய்து குற்றவாளிகள் தர்மேந்திர குமார், தேவேந்திர குமார் உட்பட 5 பேரை கைது செய்தனர். இவர்கள் மீது கற்பழிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரக் ஷா பந்தன் விழாவுக்கு சென்ற 11 தொழிலாளர்கள் பரிதாப சாவு!

## பேருந்து மீது டிராக்டர் மோதியது!!

லக்னோ, ஆக.19–

ரக் ஷாபந்தன் விழாவுக்காக சொந்த ஊருக்கு சென்று கொண்டிருந்த 11 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தார்கள். புலந்த்ஷாஹரின் சேலம்பூர் பகுதியில் தொழிலாளர்கள் பயணித்த வாகனம் மீது பேருந்து மோதியதில் இந்த விபத்து நடைபெற்றது.

காசியாபாத்தில் இருந்து சம்பல் நோக்கி சென்ற வாகனத்தில் பிரிட்டானியா நிறுவனத்தில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் ராக்கி பண்டிகையை கொண்டாட அலிகாரில் உள்ள சொந்த கிராமத்துக்கு புறப்பட்டுள்ளனர். அந்த வேன் புடான்மீரட் 



மாநில நெடுஞ்சாலையில் நேற்று சென்று கொண்டிருந்தது. அப்போது புலந்த்ஷா ஹரின் சேலம்பூர் பகுதியில் எதிரே வந்த பேருந்துடன் அந்த வாகனம் நேருக்கு நேர் மோதி பயங்கர விபத்துக்குள்ளானது.

இதில், 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், படுகாயமடைந்த 27 பேர் மீட்கப்பட்டு புலந்த்ஷாஹர், மீரட் மற்றும் அலிகார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. அவர் சிறிது நேரத்தில் பலியானார். விபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் ஆண்கள் ஆவர். அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் காயமடைந்தவர்களில் அடங்குவர் என புலந்த்ஷாஹர் காவல் துறை உயர் அதிகாரி ஷ்லோக் குமார் தெரிவித்துள்ளார். உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் விபத்து செய்தியை அறிந்தவுடன் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்ததுடன், காயமடைந்தவர்களுக்கு தேவையான உயரிய மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து சரிந்து வருவதால் பரிசல்கள் இயக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இதனால் இன்று பரிசல்களில் சுற்றுலாப் பயணிகள் பயணித்து மகிழ்ந்தனர்.



கிரைம் ஸ்டோரி

# "எம்.எல்.ஏ.ராஜா" பெயரை கேட்டாலே வேலூரே சும்மா அதிருமில்ல...

# ரவுடி ராஜ்ஜியத்தின் ராஜாவை பழிதீர்த்த கும்பல்

"எம்.எல்.ஏ ராஜா" என்ற பெயரைக் கேட்டாலே வேலூர் மற்றும் புறநகர் பகுதியே சும்மா அதிருமில்ல..
அப்படி ஒரு கெத்து அவருக்கு.
இவர் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ என்று நீங்கள் நினைத்தால் அதுதான் இல்லை. ரவுடிகள் மட்டத்தில் கெத்துக்காக தனக்குத் தானே சூட்டிக்கொண்ட பெயர்தான் `எம்.எல்.ஏ' என்ற வார்த்தை.
(M)மர்டர் (L)லீடர் (A)அக்யூஸ்ட்டாக வலம் வந்த இவர் கொலை, கொலை முயற்சி, ஆள்கடத்தல், பணம் கேட்டு மிரட்டல் என ஏகப்பட்ட குற்ற வழக்குகளுக்கு சொந்தக்காரர்.
10 ஆண்டுகளாக இவரை எதிர்த்து நிற்க ஆளே இல்லை. குண்டர் சட்டம் எல்லாம் இவரை கும்பிடு போட்டு வர வரவேற்கும். இவருக்கு சிறைக்கு செல்வது என்பது சும்மா சினிமாவிற்கு போயிட்டுவர்ற மாதிரி.



**ரவுடி சாம்ராஜ்ஜியம்**

2012ம் ஆண்டு வேலூரையே பீதிக்குள்ளாக்கிய சம்பவம் ஒன்று நடந்தது. பா.ஜ.க பிரமுகர் டாக்டர் அரவிந்த் ரெட்டி என்பவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.
இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட கூலிப்படையினரில் அரியூர் ராஜாவும் ஒருவர். அவரது ரவுடிசத்தின் தொடக்கமும் அங்கிருந்துதான் ஆரம்பமானது.
கடந்த 2020ம் ஆண்டு, டிசம்பர் 8ம் தேதி. இரவு நேரம்.
அரியூர் பகுதியில் சிறை வார்டன் உள்ளிட்ட 3 பேரை ஒரே நேரத்தில் துடிக்க துடிக்க வெட்டிக் கொல்லப்பட்டனர்.
அந்த கொடூர சம்பவத்தை அரங்கேற்றியதே ராஜா தலைமையிலான கூலிப்படையினர்தான் என்பது தான் அன்றைய வேலூர் மக்களின் மவுத் டாக்காக இருந்தது.
அன்பிறகு அரியூர் ராஜாவின் ரவுடி சாம்ராஜ்யம் கொடி கட்டிப் பறக்க தொடங்கியது.
எம்.எல்.ஏ.ராஜா வருகிறார் என்றால் மற்ற ரவுடிகள் எல்லாம் கை கட்டி நிற்க வேண்டும்.
அந்த அளவிற்கு தாதாவாக வலம் வரத் தொடங்கினார் அரியூர் ராஜா என்கிற ராஜ்குமார்.
ஆனாலும், 2020ம் ஆண்டில் 3 உயிர்களைப் பறித்த பிறகே அரியூர் ராஜாவின் கிரைம் கிராப் கிடுகிடுவென உயர்ந்தது.

**மிரட்டல்**

தொடர்ச்சியான குற்றச் சம்பவங்களால், ராஜா பலமுறை `குண்டர்' தடுப்புக் காவலிலும் சிறைப்படுத்தப்பட்டார் ஆனாலும், ராஜாவின் அட்டகாசம் அடங்கவில்லை.
ஜாமினில் வெளியே வந்த பின்னரும் அவர் தொடர் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்
ஆமா அதுக்கு இப்ப என்ன என்று தானே கேட்கிறீர்கள்.
ம்.இந்த நிலையில்தான் அன்று அரியூர் பேருந்து நிறுத்தப் பகுதியிலேயே கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார் ரவுடி ராஜா.
இவர் அரியூர் காவல் நிலையத்தில் ரவுடிகள் பட்டியலில் இடம் பெற்ற இவர், மிரட்டல் வழக்கு தொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு கைதானார்.
சில நாட்களுக்கு முன்பு தான் எம்.எல்.ஏ. ராஜா ஜாமினில் சிறையில் இருந்து வெளியே வந்தார்.
அன்று இரவு 7 மணி இருக்கும்.
ரவுடி ராஜா அரியூர் மெயின் ரோட்டில் உள்ள டீக்கடையில் இருந்து தனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார்.
அப்போது அம்பேத்கர் சிலை அருகே சென்றபோது எதிரே வந்த கார் ஒன்று ராஜாவின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியது.
இதில் நிலை தடுமாறி ரோட்டில் விழுந்தார் ரவுடி ராஜா காரில் இருந்து இறங்கிய 4 பேர் கொண்ட கும்பல் கண்ணிமைக்கும் நேரத்தில் வீச்சரிவாள்களால் ராஜாவை சரமாரியாக வெட்டியது. ரத்த வெள்ளத்தில் அப்படியே சரிந்த ராஜா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
ஆனாலும் அந்த கும்பலுக்குஆத்திரம் அடங்கவில்லை.

**நடுங்கிப்போனதாம்**

ராஜாவின் முகத்தை சரமாரியாக வெட்டியதில் அடையாளம் தெரியாத அளவுக்கு முகம் சிதைந்து போனது.. பின்னர் அந்த கொலை கும்பல் ஒரு வீச்சு அரிவாளை அங்கேயே போட்டுவிட்டு அவர்கள் வந்த காரில் ஏறிதப்பிச் சென்று விட்டது..
இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த வேலூர் எஸ்.பி. மணிவண்ணன் மற்றும்அரியூர் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.
படுகொலை செய்யப்பட்ட ரவுடி ராஜாவின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தால் ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டு விடக் கூடாது என்று காவல்துறை குவிக்கப்பட்டதால் அரியூர் பகுதியில் நள்ளிரவே நடுங்கிப் போனதாம்.
கொலை செய்துவிட்டு காரில் தப்பி சென்ற கும்பலை உடனே பிடிக்கும்படி போலீசாருக்கு எஸ்.பி மணிவண்ணன்.
உத்தரவிட்டார்.
இதையடுத்து டிஎஸ்பி திருநாவுக்கரசு தலைமையிலான தனிப்படையினர் பல்வேறு பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். மேலும் கொலை நடந்த பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். அதே நேரத்தில்
வல்லம் பகுதியில் உள்ள சுங்கச்சாவடி பகுதியில் உள்ள சுங்கச்சாவடி அருகே போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.
அப்போது அங்குவேகமாக வந்த காரை போலீசார் மடக்கி பிடித்தனர். அதில்
4 பேர் இருந்தனர். சந்தேகத்தின் பேரில் அவர்களை காருடன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தனர்.

**ஏரியாவில் யார் பெரியவர்**

முதல்கட்ட விசாரணையில், பிடிபட்டவர்கள் அரியூர் பகுதியைச் சேர்ந்த சந்துரு, அஜித் குமார், ராஜேஷ், தேஜேஷ் என்பது தெரியவந்தது.
இவர்களுக்கும் ரவுடி எம்எல்ஏ ராஜாவுக்கும் இடையே ஏற்கனவே நடந்த கொலைகள் தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது தெரியவந்தது.
இதில் பழிதீர்த்து கொள்ளவும், ஏரியாவில் யார் பெரியவர் என்பதிலும் அவர்களுக்கிடையே அடிக்கடி தீராதபிரச்சினை ஏற்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.



ஒரு சமயம் அவர்களுக்குள் நடந்த வாக்குவாதத்தில், 'உங்களை நான் கொலை செய்யாமல் விடமாட்டேன்' என்று ரவுடி ராஜா எச்சரித்ததாக தெரிகிறது.
இதனால் நம்மை கொலை செய்வதற்கு ராஜா முந்துவதற்குள்ளாக அவர் கதையை நாம் முடித்துவிட வேண்டும் என்று அந்த 4 பேரும் திட்டமிட்டு
இந்த கொலையை செய்து, பழியை தீர்த்துக் கொண்டனர்.
பிடிபட்டுள்ள 4 பேர் மீதும் ஏற்கனவே எதாவது வழக்குகள் உள்ளதா? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டது.
பின்னர் கைது செய்யப்பட்ட 4 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.
"தாதா" ராஜா விட்டு சென்ற எம்.எல்.ஏ. பதவியை பிடிக்க வேலூர் ரவுடிகளுக்குள் ஏகப்பட்ட போட்டியாம்....



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெற்றுக்கொண்டார். நிகழ்வின் போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மத்திய இணை அமைச்சர் எஸ்.முருகன், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ்மீனா, பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# அகில இந்தியாவும் போற்றும் தலைவராக கருணாநிதி உயர்ந்து நிற்கிறார்!

## நாணய வெளியீட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் புகழாரம்!!

**சென்னை,ஆக.19–**

அகில இந்தியாவும் போற்றும் தலைவராக கருணாநிதி உயர்ந்து நிற்கிறார் என்று முதல்வர்ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணா நிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்றது. நாணயத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் வெளியிட்டார். இவ்விழாவுக்கு தலைமையேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவல் அரணாக இருந்த கருணாநிதியின் உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட, நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்துள்ளது மிகவும் பொருத்தமானது. கருணாநிதி மறைந்த நாள் முதல் தினசரி அவரது புகழைத்தான் போற்றுகிறோம். கடந்த ஓராண்டாக அவரது நூற்றாண்டை முன்னிட்டு சாதனைகளைச்சொல்லும்பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம். அவரை போற்றும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினோம். இந்த பெருமைக்கெல்லாம் மகுடமாக கருணாநிதி உருவம் தாங்கிய நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

கருணாநிதியை கவுரவப்படுத்தும் வகையில் அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை வெளியிட ஒப்புதல் அளித்த மத்திய அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்பியல் பேராசிரியராக தனது பணியை தொடங்கி, அரசியல் மீதான விருப்பத்தால் கடுமையாக உழைத்து உயர்ந்தவர் ராஜ்நாத் சிங். படிப்படியாக வளர்ந்து, எம்எல்ஏவாகி, அமைச்சராகவும் அதன்பின், உத்தரப்பிரதேச முதல்வராகவும் உயர்ந்து தற்போது மத்தியபாதுகாப்புஅமைச்சராகவும் உயர்ந்துள்ளார். அவரைத்தான் நான் முதலில் இந்த நிகழ்ச்சிக்கு அழைக்க விரும்பினேன். வெவ்வேறு அரசியல் பின்னணிகள் கொண்டவர்களிடமும் அவர் நல்ல தொடர்புகளை வைத்திருப்பவர்.

இன்று நாம் பார்க்கும் நவீன தமிழகத்தை உருவாக்கிய சிற்பி கருணாநிதி தான். அவரது சாதனைகளை யாராலும் மறைக்க முடியாது. கடந்த ஆக.15ம் தேதி 78வது சுதந்திர தினத்தை கொண்டாடினோம். அன்று நான் மட்டுமல்ல, அத்தனை மாநில முதல்வர்களும் கொடியேற்றினார்களே, அந்த உரிமையை பெற்றுத் தந்தவரும் கருணாநிதிதான். அதனால்தான், இன்று அகில இந்தியாவும் போற்றும் தலைவராக உயர்ந்து நிற்கிறார். ஒரு கட்சியின் தலைவராக; ஒரு மாநிலத்தின், நாட்டின்தலைவராக எப்போதும் சிந்தித்தார், செயல்பட்டார். மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்த அதேவேளையில், நாட்டின் பாதுகாப்பு என்று வருகிறபோது கை கொடுத்தவர்தான் கருணாநிதி.

நாணயம் என்பதற்கு தமிழில் இன்னொரு பொருளும் இருக்கிறது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்குப் பெயரும் நாணயம்தான். சொன்னதையெல்லாம் செய்து காட்டியது, கருணாநிதியின் நாணயத்துக்கு அடையாளம். அவரது வழியில் இன்றையதிராவிடமாடல் அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, கருணாநிதியின் அரசாக செயல்பட்டு வருகிறது.

"சட்டப்பேரவையை அதிகார அமைப்பாக இல்லாமல் சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்" என்றார் தந்தை பெரியார். அப்படித்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இது எனது அரசல்ல; நமது அரசு. ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு. திராவிடக் கருத்தியல் கொண்ட அரசு. இதனை என்னுள் ஏற்படுத்தியவர் கருணாநிதி. அந்த வகையில் கருணாநிதியே இயக்கிக் கொண்டிருக்கிறார். ஒரு மனிதனின் வாழ்க்கை அவனது மரணத்துக்கு பிறகு கணக்கிடப்பட வேண்டும் என்று சொன்னவர் கருணாநிதி. இன்றைக்கு அவரது முகம் தாங்கிய நாணயத்தில் 'தமிழ் வெல்லும்' என்ற சொல்லும் இடம் பெற்று விட்டது என்றால், இதுவும் அவரது சாதனைதான். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

### மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின்

# உறுதியான தலைமையின் கீழ் லட்சியத்துடன் செல்லும் தமிழகம்!

## ராகுல் காந்தி புகழாரம்!!

**சென்னை,ஆக.19–**

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உறுதியான தலைமையின் கீழ் லட்சியத்துடன் தமிழகம்சென்றுள்ளது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயம் நேற்று வெளியிடப்பட்டதை முன்னிட்டு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். அந்த செய்தியில் அவர் கூறியிருப்பதாவது:

மு.கருணாநிதியின் நூற்றாண்டில், தமிழக மக்களுக்கு தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது வியத்தகு வாழ்க்கை மற்றும் பாரம்பரியத்தைப் போற்றும் வகையில் நினைவு நாணயம் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். கருணாநிதியின் சமூக நீதியான முற்போக்கு பார்வையும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் கோடிக்கணக்கான மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தது.



அவரது உறுதியான தலைமை யின் கீழ், தமிழகம் ஒரு திடமான லட்சியப் பாதையில் சென்றுள்ளது. அவரது கருத்தியல் தெளிவும் மாற்றத்துக்கான அர்ப்பணிப்பும் தமிழகம் பல்வேறு துறைகளில் தன்னை முன்னோடி மாநிலமாகநிலைநிறுத்திக்கொள்ள உதவியது. பல மாநிலங்கள் பெரிய கனவுகள் காண ஊக்கமளித்துள்ளது.

இந்நிகழ்வில், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய இந்தியாவைப் பாதுகாப்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பாராட்டுகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ராகுல் காந்திக்கு நன்றி தெரிவித்து முதல்வர்ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "கருணாநிதியின் நினைவு நாணய வெளியீட்டு விழாவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, வாழ்த்துகளைத் தெரிவித்த ராகுல் காந்திக்கு நன்றி. கருணாநிதியின் கனவுகளை நிறைவேற்றத் தொடர்ந்து ஒன்றிணைந்து பாடுபடுவோம்" என தெரிவித்துள்ளார்.

### சதுர்த்தி விழாவையொட்டி

# நாமக்கல்லில் விநாயகர் சிலை தயாரிக்கும் பணிகள் தீவிரம்!

## கணினி காலத்திலும் களிமண்ணுக்கு மவுசு!!

**நாமக்கல், ஆக.19–**

ஆவணியில் வரும் விநாயகர் சதுர்த்தி விழா, தமிழகத்தில் வெகுவிம ரிசையாக கொண்டா டப்பட்டு வரு கிறது. அனைத்து மதத்தினரும் ஒன்று கூடி கொண்டாடி தீர்க்கும் சதுர்த்தி விழா வின் போது, களிமண்ணால் ஆன சிலைகளை வீடு மற்றும் கடைகள், நிறுவனங்களில் வைத்து சிறப்பு பூஜைக்கு பின்னர், நீர்நிலைகளில் கரைத்து வழிபடுவது வழக்கம். சதுர்த்தி விழாவை எதிர்நோக்கி, நாமக்கல்மாவட்டத்தில்பல்தாலும், வேறு இடங்களில் சிறு சிறு தொழிற்கூடங்கள் அமைத்து விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணியை கைவினைஞர்கள் முடுக்கி விட்டுள்ளனர் இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

கடந்த இரண்டு ஆண்டுகளை பொறுத்த வரை, சிலை விற்பனை மந்தமாக இருந்தது. இந்த ஆண்டு விற்பனை அதி களவில் இருக்கும் என்று நம்புகிறோம். பெட் ரோல் டீசல் மற்றும் காகித விலை உயர்வு உள் ளிட்ட காரணங்களால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விநாயகர் சிலைகள் விலை சற்று அதிகரிக்க வாய்ப்புள் ளது. இருந்தாலும் சிலர் தற்போதே தங்களுக்கு வேண்டிய வடிவங்க ளில் சிலைக்கு ஆர்டர் கொடுத்து விட்டுச் செல் கிறார்கள். நாளுக்கு நாள் நவநாகரிகங்கள் வளர்ச்சியடைந்து வந் கணினி மற்றும் செல்போன்,தொலைத்தொடர்பு,வீடியோ கான்பரசிங் உள்ளிட்ட சாதனங்கள் வந்தாலும் பாரம்பரிய விழாக்களை மாறாமல் இன்றளவும் கொண்டா டப்பட்டு வருவது வரவேற் கத்தக்கது.



நாமக்கல் மாவட் டத்தை பொறுத்தவரை, சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் கிழங்குமாவு, காகித கூழ், மரக்கூழ் உள்ளிட்ட கலவைகளை கொண்டு. விநாயகர் சிலைகளை தயாரித்து வருகிறோம். இந்த வகை சிலைகள் தண்ணீரில் எளிதில் கரையக் கூடியதாகவும். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்ப்படாத வகையிலும் இருப்பதால், நாமக்கல் பகுதியில் உற்பத்தி செய் யப்படும் சிலைகளுக்கு மவுசு அதிகரித்துள்ளது. குறிப்பாக களிமண்ணால் ஆன சிலைகள் தயாரிப்பு முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. சுமார் ஒரு அடி முதல் 3 அடி உயரம் வரை சிலைகளை தயாரித்து விற்பனைக்கு அனுப்பி வைத்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

சம்பய் சோரன் பா.ஜ.க.வில் சங்கமம்:

# ஜார்க்கண்டில் ஜனாதிபதி ஆட்சி விரைவில் அறிவிப்பு வெளியாக வாய்ப்பு!

ராஞ்சி, ஆக.19–

ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சம்பய் சோரன் தனது ஆதரவாளர்களுடன் பா.ஜ.க.வில் சங்கமிக்கிறார். இதனால் ஜார்க்கண்டில் ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு அருதிப் பெரும்பான்மையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்பின்னணியில் ஜார்க்கண்டில் ஜனாதிபதி ஆட்சி வெகு விரைவில் அமலாக்கப்படும் என ராஞ்சி அரசியல் வட்டாரத்தில் பரவலாக பேசப்படுகிறது.

ஜார்க்கண்ட் சட்டசபையில் மொத்த இடங்கள் 81 உள்ளன. இதில் இப்போது 6 இடங்கள் காலியாக உள்ளன. 45 எம்.எல்.ஏ.க்கள் ஆளுங்கூட்டணியில் அங்கம் வகிக்கிறார்கள். ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா –26, காங்கிரஸ்– 17, ராஷ்ட்ரிய ஜனதா தளம் –1, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் விடுதலை–1. மற்றவர்கள் பா.ஜ.க. தரப்பை சேர்ந்தவர்கள்.

ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் சம்பய் சோரன் திடீரென டில்லிக்கு சென்றிருப்பது இண்டியா கூட்டணியினரிடையே பல்வேறு விவாதங்களை எழச் செய்துள்ளது.

ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட போது, முதல்வர் பொறுப்பை சம்பய் சோரன் ஏற்றார். பின்னர், ஜாமினில் வெளியே வந்த பிறகு ஹேமந்த் சோரன் மீண்டும் முதல்வர் ஆனார். இதனால், சம்பய் சோரன் அதிருப்தியில் இருப்பதாகவும், இதனால், பா.ஜ.க.வில் சேர இருப்பதாகவும் தகவல் வெளியாகியது.

இந்த நிலையில், ஜார்க்கண்ட்டில் ஆளும் முக்தி மோர்ச்சா கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் சிலருடன் சம்பய் சோரன் டெல்லிக்கு சென்றிருப்பதாகவும், அங்கு பா.ஜ.க. மூத்த தலைவர்களைச் சந்தித்து பா.ஜ.க.வில் இணைய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக, நேற்றிரவு கொல்கத்தாவில் எம்.எல்.ஏ.,க்களுடன் சம்பாய் சோரன் தங்கியதாகவும், அங்கு மேற்கு வங்க பா.ஜ.க. தலைவர் சுவேந்து அதிகாரியை சந்தித்து பேசியதாகவும் சொல்லப்படுகிறது. அது மட்டும் இல்லாமல், மத்திய பிரதேச முன்னாள் முதல்வர் சிவராஜ் சிங் சவுகானுடன் சம்பய் சோரன் ஏற்கனவே தொடர்பில் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆளும்தரப்பைச்சேர்ந்த 8 எம்.எல்.ஏ.க்கள் அணி மாறினால் அரசு பெரும்பான்மையை இழந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பய் சோரன் அணியில் 8–க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏ.க்கள் உள்ளதாக கூறப்படுகிறது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா அதிருப்தியாளர்கள் மட்டுமல்லாமல், காங்கிரஸ் அதிருப்தியாளர்களும் ஹேமந்த் சோரன் அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி உள்ளதாக கூறப்படுகிறது.

இப்பின்னணியில் ஜார்க்கண்டில் விரைவில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் வாய்ப்பு மேலோங்கி உள்ளது என ராஞ்சி அரசியல் வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படுகிறது. ஜார்க்கண்ட் சட்டசபைக்கு நவம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும். தேர்தல் அட்டவணை அக்டோபர் மாதமே வெளியிடப்படும்.

எனவே ஜார்க்கண்டில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்துவதில் சிக்கல்எதுவுமில்லை. அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே ஜார்க்கண்ட் தேர்தல் நடந்து முடிந்து விடும் என்பதால் அரசியல் சாசன ரீதியிலான பிரச்சினை எழ வாய்ப்பில்லை என்பதை சட்ட வல்லுனர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.



ஈரோடு காளிங்கராயன் பாளையத்தில்இயற்கை பாதுகாப்பை வலியுறுத்தி பசுமை மாறத்தான் போட்டி நடந்தது இதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதை ஒருங்கிணைப்பாளரும், த.மா.கா மாவட்ட தலைவருமான விஜயகுமார் தொடங்கி வைத்தார்.

மாவட்டம்தோறும் கருணாநிதி நூற்றாண்டு விழா

# நூலகம், பேருந்து நிலையம், மருத்துவமனை திறப்பு!

## தமிழக அரசு தகவல்!!

சென்னை, ஆக. 19–

மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டை முன்னிட்டு கடந்த ஓராண்டாக அரசு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் நூலகம், பேருந்து நிலையம், மருத்துவமனை உள்ளிட்டவை மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக, கடந்தாண்டு மே 22ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தலைமைச் செயலர் தலைமையில் ஜூலை 4, 26, ஆக.3, அக்.16 மற்றும் நவ.1ம் தேதிகளில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கிடையில், அமைச்சர்கள் தலைமையில் 12 சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கடந்தாண்டு ஜூன் 2ம் தேதி காந்தியடிகள் பேரன் கோபாலகிருஷ்ண காந்தியால், 'கலைஞர் 100' இலச்சினை வெளியிடப்பட்டது. ஜூன் 15ம் தேதி கிண்டி கிங் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில், கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனையையும், மதுரையில் ஜூலை 15ம் தேதிகலைஞர்நூற்றாண்டு நூலகத்தையும் முதல்வர் ஸ்டாலின் திறந்தார்.

கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான் போட்டியில் பங்கேற்று சாதனை படைத்த 73,206 பேருக்கு முதல்வர் சான்றிதழ் வழங்கினார். 'www.kalaignar100.com' என்ற இணையதளம் தொடங்கப்பட்டது. கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், மதுரை அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஆகியவை திறக்கப்பட்டன. கருணாநிதியின் நினைவிடம் கடந்த பிப்.24ம் தேதியும், திண்டுக்கல் மாவட்டம் காளாஞ்சிப்பட்டியில், கருணாநிதி நூற்றாண்டு, ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு மையம் பிப்.27ம் தேதியும் திறக்கப்பட்டன.

நிதி ஒதுக்கீடு: கருணாநிதி நூற்றாண்டு விழாவை கடந்தாண்டு ஜூன் முதல் இந்தாண்டு ஜூன் வரை கொண்டாட ரூ.8.34 கோடி ஒதுக்கப்பட்டது. பள்ளிகளில்தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க கலைஞர் நூற்றாண்டு தமிழ் ஊக்குவிப்பு நிதி, கலைஞர் நூற்றாண்டு விழாசிறப்புக்குழுக்களில் கலைஞர் குழுவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. தமிழகத்தில் வாழும் 275 தமிழறிஞர்களைச் சிறப்பிக்க, ஒவ்வொருவருக்கும் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

அமைச்சர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட 12 குழுக்கள் சார்பில் கருத்தரங்கம், புகைப்படக் காட்சி, பட்டிமன்றம், முத்தமிழ் தேர் பவனி, கலை நிகழ்ச்சி, கவியரங்கம், மலர் மற்றும் குறும்படம் வெளியீடு, மெல்லிசை நிகழ்ச்சி மற்றும் பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன

கருணாநிதி நூற்றாண்டை முன்னிட்டு, தமிழகஅரசின்கூட்டுறவுத் துறை சார்பில் பல்வேறு கடன்கள் வழங்க முகாம்கள், தீயணைப்புத் துறை சார்பில் பயிற்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், நெடுஞ்சாலைத் துறை சார்பில் 100 மேம்பாலங்கள் புதுப்பித்தல் மற்றும் தீயணைப்பு துறை சார்பாக 35 மாவட்டங்களில் மரக்கன்றுகள் நடும் விழாக்கள் நடத்தப்பட்டன. மேலும் சுற்றுலாத் துறை சார்பில் 16 மாவட்டங்களில் தூய்மைப் பணி முகாம், அருங்காட்சியகங்கள் துறை சார்பில் மாணவ மாணவியருக்கு போட்டிகள், தோட்டக்கலைத் துறை சார்பில் செம்மொழிப் பூங்காவில் மலர்க் கண்காட்சி ஆகியவை நடத்தப்பட்டன.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்டம்தோறும் சிறப்பாக கலைவிழா, நலத்திட்ட விழா, பரிசளிப்பு விழா நடத்தப்பட்டன. இதைத்தொடர்ந்து, நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான விழாவில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கருணாநிதி நூற்றாண்டு நாணயத்தை வெளியிட்டார்.

ஒரு மாதத்திற்கு பிறகு

# வங்கதேசத்தில் பள்ளி, கல்லூரிகள் திறப்பு!

டாக்கா, ஆக.19–

வங்க தேசத்தில் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் என அனைத்து கல்வி நிறுவனங்களும் திறக்கப்ப ட்டன.

மாணவர்கள் போராட்டத்தால் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களையடுத்து கடந்த ஜூலை 17–ஆம் தேதி அனைத்து கல்வி நிலையங்களும் காலவரையின்றி மூடப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் ஒரு மாதத்துக்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக வங்கதேச ஊடகங்களில் வெளியான செய்திகளில், நாட்டில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் ஆகஸ்ட் 18–ஆம் தேதி முதல் வழக்கம்போல் செயல்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து1 கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து டாக்கா நகரின் பல பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வங்கதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் வியாழக்கிழமை வரை வேலைநாள்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருவது குறிப்படத்தக்கது.

கார் டயர் வெடித்து விபத்து:

# தெலுங்கானா மாணவர் பலி!

ஒட்டன்சத்திரம், ஆக.19–

தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் அம்ருத் (வயசு 24 ).அங்குள்ள ஒரு கல்லூரியில் பி.டெக் இறுதி ஆண்டு படித்து வருகிறார்.இந்த நிலையில் தனது நண்பர்களான வெங்கடேஷ், ரமேஷ் மற்றும் தம்பி அபி ஆகியோருடன் ஒரு சொகுசு காரில் கோவை ஈஷா யோகா மையம் சென்று விட்டு ராமேஸ்வரம் செல்வதற்காக கோவையிலிருந்து ஒட்டன்சத்திரம் நோக்கி வந்து கொண்டு இருந்தனர்.அப்போது பொள்ளாச்சி–ஒட்டன் சத்திரம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலை காவேரியம்மாபட்டி அருகே வந்த போது எதிர்பாராமல் கார் டயர் வெடித்து தடுப்பு சுவரில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் காரில் பயணம் செய்த அம்ருத் பலத்த காயம் அடைத்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்ற மூன்று பேர்காயம் இன்றி உயிர்தப்பினர்.

இது குறித்து ஒட்டன்சத்திரம் போலீசார் வழக்கு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாலியல் வன்கொடுமை

# வழக்கு பதிவு செய்யாத பெண் உதவி ஆய்வாளர் ஆயுத படைக்கு மாற்றம்!

தஞ்சாவூர், ஆக. 19–

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகே 23 வயது இளம் பெண் ஒருவர், 17 வயது சிறுவன் உள்ளிட்ட 4 பேரால் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். இது தொடர்பாக ஒரத்தநாடு அனைத்து மகளிர் போலீஸார் வழக்கு பதிவு செய்து, 4 பேரையும் கைது செய்தனர்.இந்நிலையில், இளம் பெண் அளித்த வாக்கு மூலத்தில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. பாதிக்கப்பட்ட இளம் பெண்ணுக்கு சிகிச்சை அளிக்க மறுத்த பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு விளக்கம் கேட்டு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.பாதிக்கப்பட்ட பெண் கடந்த 12ம் தேதி பாப்பாநாடு காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்றபோது, அங்கு பணியில் இருந்த பெண் உதவி ஆய்வாளர்சூர்யா, புகாரைஏற்காமல், இளம்பெண்ணை ஒரத்தநாடு அனைத்துமகளிர் காவல் நிலையத்துக்கு அனுப்பிவைத்து, அலைக்கழித்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, புகார் அளிக்க வந்த பெண்ணுக்கு உடனடியாக சட்ட உதவி வழங்காமல், அவரை அலைக்கழித்ததுடன், சம்பவம் குறித்து உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல், பணியில் அலட்சியமாக பாப்பாநாடு பெண் உதவி ஆய்வாளர் சூர்யா செயல்பட்டதை,

தஞ்சாவூர் மாவட்ட எஸ்.பி. ஆசிஷ் ராவத் உறுதி செய்தார். இந்நிலையில், பெண்உதவி ஆய்வாளர்சூர்யாவை, தஞ்சாவூர் ஆயுதப் படைக்கு நேற்று முன்தினம் பணியிட மாற்றம் செய்து எஸ்.பி. உத்தரவிட்டுள்ளார்.





ஈரோட்டில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் புதிய நிர்வாகிகள் தேர்வு மற்றும் உறுப்பினர் சேர்க்கை கலந்தாய்வு நடைபெற்றது .இதில் மாவட்ட தலைவர் செல்வராஜ் பேசினார்.

# கொடைக்கானலில் இளைஞர்களை சீரழிக்கும் போதை காளான்!

## வெளிமாநில சுற்றுலா பயணிகளை குறிவைக்கும் கும்பல்!!

திண்டுக்கல், ஆக. 19–

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளை குறிவைத்து 'மேஜிக் மஸ்ரூம்' எனும் போதைக் காளான் விற்பனை செய்வது அதிகரித்துள்ளது. சுற்றுலா வரும் இளைஞர்கள் பலர் இதற்கு அடிமையாவதைத் தடுக்க போலீஸார் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

கோடைவாசஸ்தலமான கொடைக்கானலுக்கு அண்மைக்காலமாக இளைஞர்கள் சிலர் 'மேஜிக் மஸ்ரூம்' எனப்படும் போதைக் காளானைத் தேடி வருவது அதிகரித்துள்ளது. கொடைக்கானலில் அடர்ந்த வனப் பகுதியில் வளரும் இந்தக் காளான்களை, முன்பு விறகு எடுக்கச் செல்வோரிடம் கூறி, போதைப் பொருள் விற்பனையாளர்கள் எடுத்து வரச் செய்தனர். அவற்றை தங்களுக்குத் தெரிந்த சிலருக்கு மட்டுமே விற்பனை செய்து வந்தனர்.

நாளடைவில் ஏராளமானோர் போதைக்கு அடிமையாகிவிட்ட நிலையில்,தற்போதுவிற்பனையாளர்களே மலைப் பகுதிகளில் தேடி அலைந்து, போதைக் காளானை பறித்துவரத் தொடங்கிவிட்டனர். தற்போது போதைக்கு அடிமையான பலர் சுற்றுலாப் பயணிகள்என்ற போர்வையில் கொடைக்கானலுக்கு அடிக்கடி வருவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

சிறிய அளவில் இருக்கும் காளானின் எண்ணிக்கைக்கு ஏற்ப ரூ.500 வரை விற்பனை செய்யப்படுகிறது. தாங்கள் தங்கியிருக்கும் விடுதிகளிலேயேபோதைக்காளான் எங்கு கிடைக்கும் என்று இளைஞர்கள் விசாரிக்கின்றனர். அனுமதியின்றி செயல்படும் தங்கும் விடுதிகள், பாதுகாப்பின்றி செயல்படும் குடில்களில் போதை காளான் விநியோகம் சர்வ சாதாரணமாக நடக்கிறது. இந்த காளான் குறித்து சமூக வலைதளங்களில் பகிரப்படும் தகவல்களால், மேலும் பல இளைஞர்கள் இதைத் தேடி கொடைக்கானலுக்கு வருவது அதிகரித்துள்ளது.

அண்மையில் ஏரிச் சாலை, பாம்பார்புரம், பேரிபால்ஸ் உள்ளிட்ட பகுதிகளில் தங்கியிருந்த கேரளா, தெலங்கானா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலக் கல்லூரி மாணவர்களிடம் போதைக் காளான் விற்க முயன்ற மலைக் கிராமத்தைச் சேர்ந்த 5 பேரை போலீஸார் கைது செய்தனர். இதுபோன்ற நடவடிக்கைகள் கடுமையானால்தான் போதைக் காளான் கலாச்சாரத்தைத் தடுக்க முடியும் என்று மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

போதைக் காளானை முட்டையுடன் சேர்த்து ஆம்லேட்டாக உட்கொள்கின்றனர். இதில் உள்ள 'சைலோசின்' என்ற வேதிப்பொருள் உட்கொள்பவர்களை மயக்க நிலைக்குக் கொண்டு செல்கிறது. இதனால் மாயத்தோற்றம் ஏற்பட்டு, போதையை அனுபவிக்கின்றனர். போதைக் காளான் விற்போர், வாங்குவோரை கைது செய்தாலும், அவர்களைத் தண்டிக்க முறையான சட்டப்பிரிவு இல்லை. இதனால் கைது செய்யப்பட்டோர் விரைவில் சிறையிலிருந்து வெளி யே வரும் நிலை தான் உள்ளது.

போதைக் காளானை பறிக்கச் செல்வோரை கைது செய்யவும், அவற்றை வாங்க வரும் சுற்றுலாப் பயணிகளைக் கண்டறிந்து தடுக்கவும் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு போலீஸார் தீவிரநடவடிக்கைஎடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சுற்றுலா நகரமான கொடைக்கானல், போதை நகரமாக மாறிவிடும் என்று சமூக ஆர்வலர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு:

# ரவுடி ஆற்காடு சுரேஷின் மனைவி கைதாகிறார்?

சென்னை, ஆக.19

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில், இதுவரை 23 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளநிலையில், தற்போது ரவுடி ஆற்காடு சுரேஷின் மனைவி கைதாக உள்ளதாக கூறப்படுகிறது.

சென்னை பெரம்பூரில் பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் ஜூலை 5–ஆம் தேதி படுகொலை செய்யப்பட்டார். கொலை வழக்கில், இதுவரை 23 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய ரவுடிகள் சம்போ செந்தில், சீசிங் ராஜா ஆகியோரை தனிப் படை போலீசார் தேடி வருகின்றனர். கடந்தாண்டு, ஆக.18–ஆம் தேதி, சென்னை பட்டினப்பாக்கம் அணுகு சாலையில், ரவுடி ஆற்காடு சுரேஷ் மர்ம நபர்களால் கொலை செய்யப்பட்டார். இதற்கு பழிவாங்கும் நோக்கில் தான், ஆம்ஸ்ட்ராங் கொல்லப்பட்டதாக தகவல் வெளியானது. இந்த நிலையில், ஆம்ஸ்ட்ராங்கை கொலை செய்ய திட்டம் தீட்டியதில் ஆற்காடு சுரேஷின் மனைவி பொற்கொடிக்கும் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆந்திராவில் உறவினர் வீட்டில் பொற்கொடி பதுங்கியிருந்த நிலையில் தனிப்படை போலீசார் அவரை பிடித்து விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணை இரவு முழுவதும் நடைபெற்றதாக தெரிகிறது. போலீசாரின் விசாரணையில் ஆம்ஸ்ட்ராங் கொலையில் தொடர்பு இருப்பது தெரிய வந்தால் ஆற்காடு சுரேஷின் மனைவி பொற்கொடி கைது செய்யப்படுவார் என்று தெரிகிறது.

திருச்செந்தூர் அருகே விபத்து;

## சாவு 3–ஆக உயர்வு!

திருச்செந்தூர், ஆக.19

திருச்செந்தூர் கன்னியாகுமரி சாலையில் கல்லாமொழி அருகே நேற்று இரண்டு பைக்குகள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் உடன்குடி அனல் மின் நிலைய கட்டுமான பணியில் ஒப்பந்த தொழிலாளராக பணி புரிந்து வந்த நெல்லை டவுன் பகுதியைச் சேர்ந்த மகாராஜன் (37). திருச்செந்தூர் அருகே உள்ள நடுநாலுமூலைக் கிணறு பகுதியை சேர்ந்த கூலித் தொழிலாளி வனராஜ் (28). ஆகிய இரண்டு பேரும் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர். மேலும் இந்த விபத்தில் படுகாயம் அடைந்த கன்னியாகுமரி மாவட்டம் ராஜாகமங்கலம் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி நாகராஜ் (33) தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.



9 மாநில பல்வேறு வகை பண்டங்கள் பங்கேற்ற இந்திய உணவுப்பண்டிகை உடுமலையை அடுத்த பள்ளிப்பாளையத்தில் நடந்தது.

உடுமலை அருகே

# 9 மாநில உணவு திருவிழா!

உடுமலை, ஆக. 19–

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த பள்ளபாளையத்தில் இயங்கிவரும் வேதவியாஸ் வால்டாரா பள்ளியில் டேஸ்ட் ஆப் பாரத் மூலம் இந்திய உணவுப்பண்டிகைநடந்தது. மகாராஷ்டிராவின்நிம்புபாணி, ராஜஸ்தானின் சுருமா லட்டு, மத்திய பிரதேசத்தின் இந்தோரி போகா, காஷ்மீரின் காவா, கர்நாடகத்தின் கேசரிவாத், தமிழகத்தின் சேலம் நொருக்கல், மேற்கு வங்கத்தின் ஜல்மோரி போன்ற பதார்த்தங்கள் ஸ்டால்களில் ஸ்லைடிங் ஸ்கேல் முறையில் விற்பனை செய்யப்பட்டது. உணவு உண்பதால் மட்டும் உணவல்ல உழைப்பின் விளைவால் உண்பதே உணவு என்பதை உணர்த்தும் மகத்தான வால்டோர்ப் பாடதிட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கும் குழைந்தைகளுடன் ஒன்றாக சேர்ந்து செயல்பட்ட ஆசிரியர்களுக்கும் விழாவில் பங்கு பெற்ற பெற்றோருக்கும் இறுதியாக வேதவியாஸ் வால டோர்ப் பள்ளி நிறுவனம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.


## காணவில்லை



பெயர்:
C.சுந்தரம்
த/பெ.சின்னசாமி
வயது 54
உயரம் 160cm

இவர் 15.08.2024 அன்று முதல் காணவில்லை காணாமல் போன அன்று நீல நிறத்தில் பனியன் மற்றும் சாம்பல் நிறத்தில் டவுசர் அணிந்திருந்தார்.

இவரை பற்றி தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்

தொடர்புக்கு செல்: 91592 63149 அல்லது
துடியலூர் காவல் நிலையம் செல்.94981 01198

### மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன்

# ஆனைமலை நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படும்!

## எடப்பாடி பழனிசாமி பேச்சு!!

பல்லடம்,ஆக.19–

தன் வாழ்நாள் முழுவதும் விவசாயிகளுக்காவே அர்ப்பணித்து மறைந்த முன்னாள் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் என் எஸ் பழனிசாமியின் 82வது பிறந்த நாளை முன்னிட்டு மணி மண்டப திறப்பு விழா திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டம் நாதகவுண்டன் பாளையம் கிராமத்தில் நடைபெற்றது.



இந்த மணிமண்டபத்தை முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்து மறைந்த விவசாயி என்.எஸ்.பழனிச்சாமி அவர்களுக்கு மரியாதை செலுத்தினார். ஏர்முனை இளைஞர்அணி செயல்தலைவர் என்.எஸ்.பி. வெற்றி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, பொள்ளாச்சி ஜெயராமன், உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.எஸ்.எம். ஆனந்தன், செ.மா. வேலுச்சாமி, தாமோதரன், கருப்பண்ணன், ராமலிங்கம், தனபால், சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், கே.என்.விஜயகுமார், கந்தசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் குணசேகரன், கரைப்புதூர் நடராஜன், பரமசிவம், என்.எஸ்.நடராஜன், சிவசாமி உட்பட அ.தி.மு.க. நிர்வாகிகள், விவசாயிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

அப்போது அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில், என்.எஸ். பழனிச்சாமி சட்டன்றத்தில் பேசிய போது எல்லாம் விவசாயிகளுக்கு குரல் கொடுத்தார். அம்மா அவர்கள் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று கரூர் மாவட்டத்தை உருவாக்கினார். பச்சைத்துண்டு காவலன் என் எஸ்.பழனிச்சாமி அவர்களுக்கு மணி மண்டபம் திறப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மணி மண்டபம் அவர் புகழை காலம் முழுக்க எடுத்து செல்லும். நாராயணசாமி நாயுடு அவர்கள் மணி மண்டபத்தை நானே திறந்தேன் . அப்போது எனக்கு ரேக்ளா வண்டி பரிசளித்தார்.

இப்போது என்.எஸ்.பி. மணி மண்டபத்தை நானே திறக்கிறேன். எந்த தொழில் வேண்டுமானாலும் செய்து விடலாம் ஆனால் விவசாயம் கஷ்டமான தொழில். எனக்கு நீங்கள் முதல்வராக அங்கீகாரம் கொடுத்ததும் விவசாயிகளுக்கு, தொழிலுக்கு நான் முக்கியத்துவம் அளித்தேன். அம்மா அவர்கள் இருக்கும்போது, திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்டத்தின் விவசாயிகள் வறட்சியால் வேதனைப்பட்டார்கள்.

தண்ணீர் கிடைக்காமல் இருப்பதால் விவசாயிகள் அம்மா அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். அம்மா அவர்களும் கோரிக்கையை ஏற்று அத்திக்கடவு அவினாசி திட்டம் செய்து தருவதாக உறுதி அளித்தார்கள். நான் முதல்வராக இருந்த காலத்தில் அம்மா அவர்களின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று ரூ.1652 கோடி ஒதுக்கி பணியை தொடக்கி வைத்தேன். நாங்கள் ஆட்சியில் இருந்த போது 90சதவீத பணிகளை நிறைவேற்றி வைத்தோம். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த திமுக இந்த திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டார்கள். ஆனைமலை நல்லாறு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதற்காக நான், முன்னாள் அமைச்சர்கள் எஸ்பி வேலுமணி, பொள்ளாச்சி ஜெயராமன் ஆகியோர் கேரளா முதல்வரை சந்தித்து பேசினோம், அவர் இந்த திட்டத்திற்கு முயற்சி எடுக்கிறேன் என்று கூறினார். மீண்டும் ஆட்சி அமையாததால் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது திமுக அரசு அதற்கு முயற்சி எடுக்கவில்லை, மீண்டும் அதிமுக ஆட்சி வந்தவுடன் ஆனைமலை நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படும், உழவர் பெருமக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் இந்த நிகழ்வு சிறப்பாக அமைந்தது என்று அதிமுக பொதுச் செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிச்சாமி பேசினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் இந்து மக்கள் கட்சியின் மாநில தலைவர் அர்ஜூன் சம்பவத் மற்றும் கொங்கு இளைஞர் பேரவை தலைவர் தனியரசு ஆகியோர் அப்பகுதிக்கு வருகைதந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதேபோல் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி ஈ ஆர் ஈஸ்வரன் மணிமண்டபத்திற்கு வந்து என் எஸ் பழனிச்சாமியின் திருஉருவத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.




கொல்கத்தா பெண் மருத்துவர் படுகொலையை கண்டித்து கோவை டாக்டர் முத்தூஸ் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் முத்து சரவணக்குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

# கோவை முத்தூஸ் மருத்துவமனை மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம்!

கோவை, ஆக. 19–

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து கோவை முத்தூஸ் மருத்துவமனை மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

கொல்கத்தாவில் முதுநிலை பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை கண்டித்து இந்திய மருத்துவர் சங்கத்தினர் போராட்டம் அறிவித்து நாடு முழுவதும் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கோவை சிங்காநல்லூர், சரவணம்பட்டி மற்றும் சூலூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் பிரபல தனியார் மருத்துவமனையான டாக்டர் முத்தூஸ் மருத்துவமனையில் மருத்துவர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் முத்து சரவணக்குமார்தலைமையில் முத்தூஸ் மருத்துவமனை முன்பாக, சுமார் 50–க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இதில் பேசிய மருத்துவர் முத்துசரவணக்குமார், மருத்துவர்களின் பாதுகாப்பு தற்போது கேள்வி குறியாக இருப்பதாகவும், காவல்துறையும் அரசு நிர்வாகமும் மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனவும் கேட்டு கொண்டார்.

### ஈரோட்டில்

# த.ம.மு.க.நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

ஈரோடு, ஆக. 19–

ஈரோட்டில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் புதிய நிர்வாகிகள் தேர்வு மற்றும் உறுப்பினர் சேர்க்கை கலந்தாய்வு நடைபெற்றது . கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமை தாங்கினார் . செயலாளர் மயில் துரையன் ,தொழிற்சங்க செயலாளர் குமார், இணைச்செயலாளர் செந்தில் , மகளிர் அணி தலைவி காஞ்சனா , செயலாளர் சத்யா , மாநகர இளைஞரணி செயலாளர் நல்லசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .


அதைத்தொடர்ந்து கூட்டத்தில் நிறைவேற்ற தீர்மானங்கள் வருமாறு

ஈரோடு மாவட்டத்திலுள்ள சாய தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை முறையாக சித்தரிப்பு செய்ய சித்தரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் . அரசு வழங்கும் விலையில்லா வேட்டி , சேலை உற்பத்தி திட்டத்திற்கு காட்டன் நூல் வழங்க வேண்டும் .

ஈரோடு அரசு மல்டி ஸ்பெஷாலிட்டி ஆஸ்பத்திரிக்கு தேவையான நவீன எந்திரங்களை வாங்கி அனைத்து பிரிவுகளுக்கும் மருத்துவ சிகிச்சை நிபுணர்களை நியமிக்க வேண்டும் .

ஈரோடு மாநகர் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .மஞ்சள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க அரசு மஞ்சள் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt. Ltd. from Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641 006. Tamil Nadu and printed by N.Durai Prakash at Kovai Malai Murasu Achagam, No.292, old No.1351, Sathy Road, Venkatesapuram, Ganapathy, Coimbatore-641006, Tamil Nadu. Editor:S.N.Selvam.



உடுமலையில் தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திறந்து வைத்தார்.

# உடுமலையில் தி.மு.க. எம்.பி. அலுவலகத்தை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

உடுமலை, ஆக. 19–

உடுமலை மற்றும் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் உடுமலை கச்சேரி வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்மு.பெ. சாமிநாதன் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகத்தில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழாவில் எம்பி ஈஸ்வரசாமி திமுக செயலாளர் இல. பத்மநாபன் அவைத் தலைவர் ஜெயராமகிருஷ்ணன். நகர செயலாளர் வேலுச்சாமி உடுமலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மறைமலை மாவட்ட பொருளாளர் முபாரக் அலி நகர்மன்ற தலைவர் மத்தீன் மற்றும் ஆறுச்சாமி சக்திவேல் மகாலிங்கம் ஷாம்பிரசாத் ஒன்றிய செயலாளர்கள் ராஜமாணிக்கம் மெய்யான மூர்த்தி,

செந்தில்குமார் செழியன் அனிக்கடவு கிரி ஆடி வெள்ளி முரளி சாகுல் ஹமீது மற்றும் காளியப்பன் கதிர்வேல் கமலக்கண்ணன் தாராபுரம் தனசேகரன் மாவட்ட ஒன்றிய நகர திமுக நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.

கூட்டணி கட்சிகள் சார்பில் தென்னரசு காங்கிரஸ் மதுசூதனன் ( மா .கம்யூ.) ஈஷாக் ( இ.கம்யூ) தமிழரசு முன்னாள் எம்பி கிருஷ்ணன் மதிமுக ரகுபதி ராகவன்( கொமதேக) விடுதலைச் சிறுத்தைகள் சதீஷ்குமார் முஸ்லிம் லீக் சித்திக் மமகஅப்துல் கபூர் திராவிடர் கழகம் கிருஷ்ணன் மக்கள் நீதி மையம் குருமூர்த்தி திராவிட இயக்க தமிழ் பேரவை பிரகாஷ் மற்றும் இளவேந்தன் திருப்பதி உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.

# போலி அமெரிக்க டாலர் கொடுத்து மோசடி; நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர் கைது!

ஈரோடு, ஆக. 19–

போலியான அமெரிக்க டாலரை கொடுத்து மோசடி செய்த நைஜீரிய நாட்டைச் சேர்ந்த நபரை போலீஸார் கைது செய்தனர்.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி அருகே தேவம்பாளையத்தைச் சேர்ந்தவர் அசோக்குமார்(36). இவர், வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்கள் நாட்டு பணத்திற்கு மாற்றாக இந்திய ரூபாய்களை மாற்றித் தருகிறார். இதுதொடர்பாக இணையதளங்களில் விளம்பரமும் செய்துள்ளார்.

இந்நிலையில், நைஜீரிய நாட்டைச் சேர்ந்த நாதன் இகேச்சுக்வு (42), அசோக்குமாரை அணுகி கர்நாடக மாநிலம் பெங்களூரில் தங்கி ஜவுளித் தொழில் செய்து வருவதாகவும், மருத்துவ சிகிச்சைக்காக அவசரமாக 500 அமெரிக்க டாலருக்கு மாற்றாக இந்திய ரூபாய் வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, ஈரோடு வந்த நாதன் இகேச்சுக்வு, அசோக்குமாரிடம்

500 அமெரிக்க டாலரை கொடுத்துவிட்டு அதற்கு மாற்றாக இந்திய மதிப்பில் ரூ.48 ஆயிரம் பெற்றுள்ளார். அதன்பின், நைஜீரிய நபர் கொடுத்த டாலரை அசோக்குமார் ஆய்வு செய்தபோது அது போலி என்பது தெரியவந்தது.

இதையடுத்து, ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.ஜவகரிடம் அசோக்குமார் அண்மையில் புகார் அளித்தார். அதன் பேரில், நைஜீரிய நாட்டைச் சேர்ந்த நாதன் இகேச்சுக்வுவைப் பிடித்து விசாரணை மேற்கொண்டனர். இதில், அவர் போலி டாலர் கொடுத்து மோசடி செய்தது உறுதியானது.

மேலும், கோவை காட்டூர் பகுதியில் இதேபோல வெளிநாட்டு போலி கரன்சிகளை கொடுத்து மோசடி செய்தது தொடர்பாக இவர் மீது ஒரு வழக்கு உள்ளதும் தெரியவந்தது.

இதையடுத்து, ஈரோடு அரசு மருத்துவமனை போலீஸார் நாதன் இகேச்சுக்வுவை கைது செய்தனர்.

# முதலமைச்சருக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது!

பாலக்கோடு. ஆக.19

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த அண்ணாமலை அள்ளி கிராமத்தை சேர்ந்த குமார், இவர் தி.மு.க. மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளராக உள்ளார்.

அதே பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளி விஜயகுமார் (42) என்பவர் நேற்று மாலை குடிபோதையில் குமாரின் வீட்டிற்க்கு சென்று அவரிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார்அப்போது தமிழக முதல்வர் ஸ்டாலின் குறித்து தரக்குறைவாகவும், அவதூறாகவும், ஆபாசமாகவும் பேசி கொலை மிரட்டல் விடுத்தார்.

இதுகுறித்து குமார் பாலக்கோடு காவல்நிலையத்தில் புகார் அளித்தார். உடனடியாக சம்பவ இடத்திற்க்கு சென்ற போலீசார் விஜயகுமாரை கைது செய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தர்மபுரி சிறையில் அடைத்தனர்.

### திருப்பூர் மாவட்ட

# சுற்றுலா தொழில் முனைவோர் ஆய்வு கூட்டம்!

திருப்பூர், ஆக. 19–

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுலா தொழில் முனைவர் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டத்தில் சுற்றுலாதுறையின் செயல்பாடுகள், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள், தற்போது நடைபெற்று வரும் திட்ட பணிகள், தமிழ்நாடு அரசு சுற்றுலாக்கொள்கை, தமிழ்நாடு அரசு சுற்றுலா துறையில் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை விருதுகள் விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்தகுமார் ஆய்வு கூட்டத்தில் சுற்றுலா தொழில் முனைவோர் இடத்தில் உரையாற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு சுற்றுலா தொழில் முனைவோர்கள் மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சி தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர். மேலும் உலக சுற்றுலா தினம் 2024 கொண்டாடுவதற்கான முன்னேற்பாடுகளில் தொடர்பாக ஆய்வுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. சுற்றுலா தொழில் முனைவோர்கள் தங்கள் தொழிலில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளை மாவட்ட சுற்றுலா அலுவலர் அவர்களிடம் தெரிவித்தனர்.

இந்த கூட்டத்தில் திருப்பூர் மாவட்ட சுற்றுலா சங்கங்களின், அறக்கட்டளைகளின் நிர்வாகிகள் நாகராஜ், குளோபல் பூபதி, சத்யம் பாபு, சிக்கனா அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் மோகன் குமார், உடுமலை அரசு கலைக்கல்லூரி சுற்றுலா பேராசிரியர் விஜய் ஆனந்த், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் நிர்வாகிகள், சுற்றுலா ஆர்வலர்கள் பங்கேற்றனர் . நிகழ்ச்சியை ஜவகர் மற்றும் பிரசாத் ஒருங்கிணைத்தனர்.




திருப்பூர் மாவட்ட சுற்றுலா வளர்ச்சி மற்றும் சுற்றுலா தொழில் முனைவோர் ஆய்வு கூட்டம் மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த்குமார் தலைமையில் நடைபெற்றது.

### கோபி அருகே

# நர்சிங் கல்லூரி மாணவி தீக்குளித்து சாவு!

கோபி, ஆக.19–

கோபி அடுத்த கள்ளிப்பட்டி அருகே உள்ள கணக்கம்பாளையம் எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்தவர் கருப்பன் என்கிற காரான். இவருடைய மகள் சூர்ய பிரபா (23). இவர் கோபியில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் படித்து வந்தார். மேலும் அவர் கோபியில் உள்ள தனி யார் மருத்துவமனையில் பயிற்சி நர்சாகவும் வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று காலை சூர்ய பிரபாவின் பெற்றோர் வேலைக்கு சென் றுவிட்டனர். பெற்றோரிடம் சூர்ய பிரபாவும் வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு சென் றவர் மீண்டும் வீட்டுக்கு வந்து விட்டார். பின்னர் அவர் திடீ ரென வீட்டில் இருந்த மண் எண்ணெயை உடலில் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். உட லில் தீப் பற்றி எரிந்ததும் வலி யால் அவர் அலறிதுடித்தார். உடனே அக்கம் பக்கத்தினர் ஓடிச்சென்று சூர்ய பிரபா வின் உடலில் பற்றிய தீயை அணைத்து மீட்டனர்.

இதை யடுத்து அவரை சிகிச்சைக் காக பெருந்துறை அரசு மருத் துவ கல்லூரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்தடாக்டர் கள் ஏற்கனவே சூர்ய பிரபா உயிரிழந்து விட்டதாக தெரி வித்தனர்.

இதுகுறித்து பங்களாப்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஈரோடு கொங்கு என்ஜினீயரிங் கல்லூரியில் நிறுவனர் தின விழா!

ஈரோடு, ஆக. 19–

கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்வி அறக்கட்டளை கடந்த 1983–ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது .

இந்த அறக்கட்டளையின் மூலம் கொங்கு பாலிடெக்னிக்கல்லூரி, கொங்கு இன்ஜினியரிங் கல்லூரி , கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி , கொங்கு பிரைவேட் இன்டஸ்ட்ரியல் ட்ரைனிங் இன்ஸ்டியூட் , கொங்கு நேஷனல் மெட்ரிக் பள்ளிக்கூடம் , கொங்கு ஸ்கூல் ஆப் ஆர்கி டெக்சர் , கொங்கு நேச்சுரோபதி மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஆகிய 7நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன .இந்த அறக்கட்டளையின் நிறுவனர்தின விழா கொங்கு இன்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்றது . விழாவுக்கு அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் ஆர்.குமாரசாமி தலைமை தாங்கினார் . விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் கே.ஆர். நாகராஜன் , சென்னை எல்.என்.டி. கட்டுமான நிறுவனத்தின் கனரக கட்டுமான பிரிவு பொது மேலாளர் வி சதாசிவம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினர் . தொடர்ந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன . இந்த விழாவில் அறக்கட்டளையின் செயலாளர் பி. சத்தியமூர்த்தி , பொருளாளர் கே.வி. ரவிசங்கர் மற்றும் அறக்கட்டளையின் பாரம்பரிய உறுப்பினர்கள் , கல்லூரிகளின் தாளாளர்கள் , முதல்வர்கள் , பேராசிரியர்கள் , பணியாளர்கள் உட்பட பல கலந்து கொண்டனர் .





### ஆசனூர் அருகே

# தோட்டத்தில் புகுந்த மலைப்பாம்பு!

புளியம்பட்டி, ஆக. 19–

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி அடுத்து ஆசனூர் வனச்சரகத்திற்குட்பட்ட பழைய ஆசனூரில் கோபிகாரர் வாழை தோட்டத்தில் நேற்று மாலை 10 அடி நீளமுள்ள மலைப்பாம்பு படுத்திருந்தது. இது பற்றி ஆசனூர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.



தீயணைப்பு துறையினர் மலைப்பாம்பை பத்திரமாக மீட்டு வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். வனத்துறையினர் மலைப்பாம்பை வனப்பகுதிக்குள் கொண்டு விட்டனர். வாழை தோட்டத்திலிருந்த மலைப்பாம்பை மீட்டதால் பொதுமக்கள் நிம்மதியடைந்தனர்.

### நிலுவை தொகை கேட்டு

# தறி தொழிலாளர்கள் திரண்டதால் பரபரப்பு!

கோபி, ஆக.19–

கோபி அருகே ஆயிபாளை யத்தில் உள்ள தறிப்பட்டறை யில் 50–க்கும் மேற்பட்டவர் கள் தறி ஓட்டி வந்தனர். இந்த நிலையில் இங்குகொரோனா வுக்கு பிறகு நஷ்டம் ஏற்பட்ட தால் கடந்த 4 ஆண்டுகளாக செயல்படவில்லை. மேலும் தறி ஓட்டும் தொழிலாளர்களுக்கு கூலித்தொகை நிலுவை வைத்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நிறுவனத்தில் இருந்து

எந்திரங்களை கழற்றி எடுத்துசெல்ல முற்பட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும் தறி தொழிலாளர்கள் அங்கு திரண்டனர். தங்களுக்கு தரவேண்டிய கூலி நிலு வைத்தொகையை வழங்கி விட்டு அதன்பின்னர் எந்திரங்களை கழற்றி செல்லுங்கள் என கூறினர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் சிறுவலூர் போலீசார் அங்கு சென்று பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது நிறுவனத்தினர் கூறும் போது, 'கூலி நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டு அதன் பின்னர் எந்திரங்களை எடுத்து 'செல்கிறோம்' என்று கூறி விட்டு சென்றனர்.

இதைத் தொடர்ந்து நேற்று இது தொடர்பான வார்த்தை நடந்தது. ஆனால் பேச்சுவார்த்தையில் சுமுக உடன்பாடு ஏற்படவில்லை. எனினும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

# சூலூர் எம்.எல்.ஏ. வி.பி.கந்தசாமி இல்ல விழா!

## எடப்பாடி பழனிசாமி பங்கேற்பு!!

சூலூர், ஆக. 19–


சூலூர்சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கந்தசாமி மற்றும் அவரது மகன் வழக்கறிஞர் பிரபுராம் இல்ல திறப்பு விழாவிற்கு தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அதிமுக பொதுச்செய லாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமிவருகைபுரிந்தார். முன்னதாக பல்லடத்தில் நடைபெற்ற விவசாயிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஒரு மணி அளவில் சூலூர் வந்தார்.

அவருக்கு சூலூர் தொகுதி அதிமுக தொண்டர்கள் சார்பாக மேளதாளங்கள் மற்றும் தாரை தப்பட்டை உடன் விமர்சையான வரவேற்பு கொடுக்கப்பட்டது. வழக்கறிஞர் பிரபுராம் புதிதாக கட்டியுள்ள ஜெய் நிவாஸ் என்னும் இல்ல புதுமனை புகுவிழா நிகழ்ச்சியில் பங்கேற்கும் விதமாக எதிர்க்கட்சித் தலைவர் வந்திருந்தார். அங்கு எம் எல் ஏ வி.பி கந்தசாமி குடும்பத்தினருடன் சுமார் 2 மணி நேரம் கலந்துரையாடினார்.

மேலும் குடும்ப உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இதனை அடுத்து அதிமுக தொண்டர்கள் திரளாக அவரை சந்தித்து வாழ்த்து பெற்றனர். ஜெய் நிவாஸ் இல்லம் சிறப்புர தனது வாழ்த்து என்றும் இருக்கும் எனவும் இல்லத்தில் என்றும் அமைதியும் வளமையும் குடிகொண்டிருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என அங்கிருந்தவர்களிடம் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, உடுமலை ராதாகிருஷ்ணன், முன்னாள் துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், கோவை புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி.. அருண்குமார், கிணத்துக்கடவுசெ.தாமோதரன், ஏ.கே.செல்வராஜ், டி.கே. அமுல் கந்தசாமி, எம்.எஸ்.எம் ஆனந்தன், முன்னாள் அமைச்சரும் முன்னாள் கோவை மேயருமான செ.ம.வேலுசாமி, முன்னாள் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன், ஒன்றிய செய லாளர்கள் ஜி.குமரவேல், வி.பி.கந்தவேல், எம்.அப்புசாமி, சூலூர் நகர செயலாளர்கார்த்திகைவேலன், மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சூலூர் நகரகழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள்கலந்துகொண்டனர்.



சூலூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கந்தசாமி மற்றும் அவரது மகன் வழக்கறிஞர் பிரபுராம் இல்ல விழாவில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி கே.பழனிச்சாமி கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார். அருகில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி உள்ளார்.



தொடர் மழை காரணமாக மடத்துக்குளம் சாலை சேதமடைந்தது. இதனை சீரமைக்கக்கோரி பொள்ளாச்சி எம்.பி. ஈஸ்வரசாமியிடம் வியாபாரிகள் சங்கத்தினர் நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

### சேதமடைந்த சாலையை சீரமைக்க கோரி

# பொள்ளாச்சி எம்.பி.யிடம் வியாபாரிகள் மனு!

மடத்துக்குளம், ஆக. 19–

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் பகுதியில் உள்ள திண்டுக்கல் கோவை தேசிய நெடுஞ்சாலை பகுதியான, மடத்துக்குளம் மெயின் ரோட்டில் சஷ்டி பேக்கரி எதிரில் ஏற்கனேவே சேதமடைந்தும், சற்று பள்ளமாகவும் இருக்கும் சாலையால், தற்போது பெய்து வரும் தொடர் கன மழை காரணமாக, சேதமடைந்த தார்சாலையில் அடிக்கடி மழை நீர் தேங்கி நின்று பொதுமக்கள் போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக இருந்து வருகிறது.

இதனை மடத்துக்குளம் வியாபாரிகள் சங்கம் சார்பில், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமியிடம் நேரில் சந்தித்து, போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் தார் சாலையை, சீரமைத்து கொடுக்கும் படி கோரிக்கை மனு வழங்கப்பட்டது. அதனைப் பெற்றுக்கொண்ட பாராளமன்ற உறுப்பினர், உடனடியாக நடவடிக்கை எடுத்து, சேதமடைந்த தார் சாலையை சரி செய்து கொடுப்பதாக, உறுதியளித்தார்.

இதில் மடத்துக்குளம் வட்டார வியாபாரி சங்கத் தலைவர் கே. பி. எம். சேட், மற்றும் திருப்பூர் மாவட்ட துணைத் தலைவர் கே. சக்தி, மடத்துக்குளம் வட்டார வியாபாரி சங்க செயலாளர் கருப்புசாமி, பொருளாளர் எம். தியாகராஜன், மற்றும் வியாபார நண்பர்களும், உடன் இருந்தனர்.

### ஈரோட்டில்

# இயற்கை பாதுகாப்பை வலியுறுத்தி பசுமை மாரத்தான் போட்டி!

ஈரோடு, ஆக.19–

இயற்கை பாதுகாப்பு வலியுறுத்திஈரோடு லட்சுமி நகரில் காலிங்கராயன் பசுமைமாரத்தான்போட்டி நடைபெற்றது.

இந்த மாரத்தான் போட்டியானது ஈரோடு மாவட்ட எல்லையான பவானி லட்சுமி நகரில் தொடங்கி வாசவி கல்லூரி வரையில் 5 கிலோமீட்டர் தொலைவிக்கும் , சித்தோடு நாள் ரோடு வரையில் 10 கிலோ மீட்டர் தொலைவில் என இரு பிரிவுகளாக நடத்தப்பட்டது .இப் போட்டிகளை ஒருங்கிணைப்பாளரும் த.மா.கா மாவட்ட தலைவருமான விஜயகுமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார் . இதில் ஆண்கள் , பெண்கள் மற்றும் சிறுவர் , சிறுமியர் பங்கேற்று ஓடினர் . காலிங்கராயன் வாய்க்கால் பாசனம் இயற்கையை காப்போம் , மரங்களை வளர்ப்போம், பிளாஸ்டிக்பயன்பாட்டை தவிர்ப்போம் , பசுமையை பாதுகாப்போம் எனும் தலைப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இப் போட்டிகள் நடத்தப்பட்டது .

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது . ஈரோடு வேளாளர் கல்லூரி தாளாளர் எஸ்டி சந்திரசேகரன் , தமிழ் மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் யுவராஜா , ஈரோடு மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் பழனிசாமி , எக்ஸெல் கல்லூரி தாளாளர் நடேசன் , மேட்டு நாசுவம் பாளையம் ஊராட்சி தலைவர் மகேஸ்வரன் , உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**மதிப்புமிகு சிறப்பு வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம் திருப்பூர்**
**IA.No.2/2024**
**MCOP 1110/2023**

பத்மாவதி மகாராஜன்
க/பெ. மகாராஜன்
கதவு எண் 1/233, அவிநாசி நகர்,
போயம்பாளையம்
பூலுவபட்டி, திருப்பூர் -641604
மனுதாரர்

எதிர்

மதியழகன், த/பெ. பிச்சை,
கதவு எண். 910/2A,
குருவாயூரப்பன் நகர், AD காலனி,
திருப்பூர் வடக்கு -641602
1-ம் எதிர் மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரருக்கு கடந்த 1/8/2023 அன்று சாலை விபத்தில் அடைந்த கொடுங்காயத்திற்காக நஷ்ட ஈடு கோரி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவானது எதிர்வரும் 27/9/2024 தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் ஆகிய நீங்கள் ஆஜராக வேண்டி வாய்தா கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணை ஏதும் இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும என்பதனை இதன் மூலம் அறியவும் .

(கோர்ட் உத்தரவுப்படி)
**A.செல்வகிருஷ்ணன்** B.B.A.,B.L,
அட்வகேட், திருப்பூர்



**மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம் (மோட்டார் வாகன விபத்து வழக்குகள்) திருப்பூர்**
**M.C.O.P No.114/2024**

M.சண்முகம்
...மனுதாரர்

-எதிர்-

J.நிஷாந்த்குமார்,
த/பெ ஜெயபாலகிருஷ்ணன்,
நெ.1/1083, பொதிகை நகர்,
தாராபுரம் ரோடு,
K.செட்டிபாளையம்,
திருப்பூர் மாவட்டம் - 641604.
...2-ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரருக்கு கடந்த 31.12.2024-ம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் காயம் அடைந்த தற்காக நஷ்ட ஈடு கோரி, ஷை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து, மேற்படி மனுவானது எதிர்வரும் 16.10.2024-ம் தேதியன்று 2-ம் எதிர்மனுதாரர்ரான தாங்கள் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நீவீர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணை ஏதும் இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்.

**V.மோகன்,** B.A., B.L.,
**S.குமார்,** B.com,B.L
வழக்கறிஞர்கள், திருப்பூர்.



**மாவட்ட சிறப்பு நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து வழக்குகள் திருப்பூர்**
**M.C.O.P.NO: 270/2024**

Johnson David Raja
...மனுதாரர்

/Vs/

Phabhu S/o. Shanmugam
No.D 343 Kurichi Housing Unit
Phase 2 SIDCO, Eachanari,
Coimbatore - 641021
...2-ம் எதிர்மனுதாரர்

2-ம் எதிர்மனுதாரருக்கு நோட்டீஸ்

மேற்படி வாகன விபத்தில் நான் அடிபட்டதற்காக நஷ்ட ஈடுகோரி மனுதாக்கல் செய்ததில் 2-ம் எதிர்மனுதாரர் ஆஜராவதற்கு 05.11.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நேரிலோ அல்லது வக்கீல் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டும் இல்லை எனில் மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கோர்ட்டார் உத்தரவுப்படி
இப்படிக்கு,
**ஆ.பாலகுமார்** பி.எ.,பி.எல்.,
மனுதாரர் வழக்கறிஞர்.
திருப்பூர்.


### பல்லடம் அருகே விபத்து:

# லாரி மீது கார் மோதல்; டிரைவர் பரிதாப சாவு!

பல்லடம்,ஆக.19–

திருப்பூர்மாவட்டம் பல்லடத்தையடுத்த பொங்கலூர் பகுதியில் திருச்செங்கோட்டிலிருந்துபொள்ளாச்சிநோக்கி சென்ற சொகுசுகாரை சதீஷ் (42) என்பவர் ஓட்டிச்சென்றுள்ளார். அப்போது காரானது பொங்கலூர் பகுதியில் உள்ள வளைவினை கடக்க முயன்றபோது எதிரேகேரளாவிலிருந்து காங்கேயம் பகுதிக்கு விறகு ஏற்றி சென்ற லாரியின் பின்பக்கம் பலமாக மோதியது. இதில் கார் அப்பளம் போல நொருங்கியது.

மேலும் லாரியின் பின் பக்க டயர் கழன்று லாரி சாலையின்நடுவே கவிழ்ந்தது.தொடர்ந்து அவ்வழியே சென்றவர்கள் கொடுத்த தகவலின் பேரில் அங்கு விரைந்து சென்ற அவிநாசிபாளையம் போலீசார் கார் மற்றும் லாரியினுள் சிக்கியிருந்த இருவரையும் மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் கார் ஓட்டுநர் சதீஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார். மேலும் லாரி ஓட்டுநர் அஜய் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.இந்த விபத்து தொடர்பாக அவிநாசிபாளையம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கோவை மாவட்ட கிராம ஊராட்சிகளில்

# இணைய தள வசதி வழங்கும் திட்டத்துக்கு எதிராக செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை!

## கோவை கலெக்டர் எச்சரிக்கை!!

கோவை,ஆக.19–

கோவை மாவட்டத்தில் உள்ள கிராம ஊராட்சிகளில் இணைய தளம்வசதி வழங்கும் திட்டத்துக்கு எதிராக செயல்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார்பாடி எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது::கோவையில் உள்ள 228 கிராம ஊராட்சிகளிலும் இணைய தளம் வசதி வழங்கும் பாரத்நெட் திட்டம் டேன்பினெட் மூலம் முழு வீச்சில் நடக்கிறது, ஆப்டிக்கல்பைபர்கேபிள்கள், 85 சதவீதம் மிவன் கம்பங்கள் மூலமும், 15 சதவீதம் தரை வழியாகவும் இணைக்கப்படுகிறது.

இதுவரை கோவையில் 191 ஊராட்சிகளில் இணைய வசதி வழங்க தயார் நிலையில் உள்ளது. இத்திட்டத்துக்கான யு பி எஸ் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள கிராம ஊராட்சி சேவை மையம் அல்லது அங்குள்ள அரசு கட்டிடத்தில் நிறுவப்படுகிறது.

இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள அறை, ஊராட்சி மன்றத்தலைவரால் தூய்மையாக பராமரிக்கப்படுகிறது. இச்சூழலில் சிலர் ஆப்டிக்கல் பைபர் கேபிள்களை தங்களுக்கு தொந்தமான நிலங்களின் வழியாக கொண்டு செல்லக்கூடாது என தடுக்கின்றனர். இது முழுமையான அரசின் திட்டம்.

ஆகவே கண்ணாடி இழையை ஏற்கனவே நிறுவியுள்ள மின் கம்பங்கள் வழியாக கொண்டு செல்வதை மக்கள் தடுக்கக் கூடாது. இதனால் பயிர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது,

ஆப்டிக்கல் பைபர் கேபிளில் எந்த உலோகப் பொருட்களும் இல்லை, அதனால் இதை திருடி பணமாக மாற்றலாம் என்ற தவறான புரிதல் வேண்டாம், இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் போது ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வசிக்கும் பொது மக்கள் அனைவரும் இணையதள வசதிகளை பெற முடியும் உபகரணங்களையோ, ஆப்டிகல் பைபர் கேபிள்களையோ சேதப்படுத்துபவர்கள், திருடுபவர்கள் கண்ணாடி இழை கேபிள்களை துண்டிப்பவர்கள் மின் கம்பங்கள் வழியாக கொண்டு செல்ல தடை செய்பவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ்வாறு கலெக்டர் கிராந்திகுமார் கூறினார்.

# ரேஸ்கோர்ஸ் நடைபயிற்சி பாதையில் நவீன வாகனத்தில் போலீசார் ரோந்து!

கோவை, ஆக. 19–

கோவைமாநகர போலீஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில் சிறிய தெருக்களில் எளிதாக ரோந்து செல்ல வசதியாக பேட்டரியில் இயங்கும் மூன்றுசக்கரங்கள்கொண்ட நவீன வாகனம் வாங்கப்பட்டு உள்ளது.

இந்தவாகனம் நின்று கொண்டே இயக்கும் பைக் போன்று தோற்றம் கொண்டுள்ளது. நவீன வாகனம் மூலம் ரேஸ்கோர்ஸ் பகுதியில் போலீசார் தினமும் காலை, மாலை நேரங்களில் ரோந்து சென்று பொது மக்களின் பாதுகாப்பான நடைபயிற்சியை உறுதி செய்வதுடன் திருடர்களையும் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர், இந்தவாகனம் ஆர்.எஸ்.புரம் வாலாங்குளம்,உக்கடம், குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் ரோந்துப்பணிக்காக பயன்படுத்தப்படஉள்ளது.

கோவையில்முதல் கட்டமாக 6நவீன வாகனங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் ஒளிவிளக்கு, சைரன், ஜபிஎஸ் கருவி வசதிகள் உள்ளன. அத்துடன் பொதுமக்களுக்கு அறிவிப்புவிடுக்கஏதுவாக ஒரு மைக்கும் இணைக்கப்பட்டு உள்ளது. ஒரு மணி நேரத்துக்கு 12 கிமீவேகத்தில்பயணிக்கும் இந்த வாகனம் ஒரு முறை ஜார்ஜ்செய்தால் 30 கி.மீ.வரை செல்லும், சஸ்பென்ஷன் அமைப்புடன் அனைத்து விதமான நிலப்பரப்பிலும்செல்லும் வகையில்இந்த வாகனம் வடிவமைக்கப்பட்டுஉள்ளது.

ஜிபிஎஸ்மூலம் போலீசார்குஎந்த பகுதியில் ரோந்து செல்கிறார்கள் என்பதை மாநகர போலீஸ்கட்டுப்பாட்டுஅறையில் இருந்தபடி கண்காணிக்க முடிகிறது, இதையாரும் திருட முடியாது, சாவியை போட்டாலும் அதற்குரிய சிறப்பு கார்டை உள்ளே சொருகினால் தான் வாகனம் புறப்படும் என்று மாநகர போலீசார் தெரிவித்தனர்.





கோவை நஞ்சுண்டாபுரம் ஊராட்சியில் வி.கே.வி குரூப் ஆப் கம்பெனி சார்பில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ– மாணவிகளுக்கு விஜயலட்சுமி அறக்கட்டளை தலைவர் ஒ.ஆறுமுகசாமி கல்வி உதவித்தொகையை வழங்கினார். இதில் ஊராட்சி தலைவர் கார்திகேஸ்வரி சுந்தர்ராஜ்,முன்னாள் தலைவர் வி.கே.வி.சுந்தர்ராஜ், வி.கே வி குருப் நிர்வாக இயக்குநர் வி.கே.வி வினிஸ், முன்னாள் எம்.எல்.ஏ சின்னராஜ், காங்கிரஸ் மாநில பொதுசெயலாளர் பச்சைமுத்து, ஊராட்சி துணைத்தலைவர் திருநாவுக்கரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக அமைதி தின விழா கருத்தரங்கம்!

கோவை,ஆக. 19–

கோவை அருகே உலக அமைதி தின விழாவேதாத்திரிய கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

தற்போது உலகில் நிலவி வரும் சூழ்நிலைகளில் சமுதாயம் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு உலசமுதாய சேவா சங்கம் கோவை மண்டலம், கோவை மாநகர மனவளக்கலை அறக்கட்டளைகள் ஒருங்கிணைந்து வேதாத்திரிய கருத்தரங்கை நேற்று மாலை 5 மணியளவில் ஆர்.எஸ்.புரம் சிந்துசதன் அரங்கில் சிறப்பாக நடத்தினர். உலக சமுதாயம் அமைதியோடு வாழ வேண்டும் என்ற நோக்கில் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியின் பிறந்த நாள் விழாவை ஒவ்வொரு ஆண்டும் உலக அமைதி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இவ்வாண்டு இவ்விழா உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர் அருள்நிதி, எஸ், செல்வராஜ் தலைமையில் அருள்நிதி வி. ஆறுச்சாமி, கோவை மண்டலத் தலைவர் முன்னிலையில் கோவை அறக்கட்டளையின் செயலாளர் டாக்டர் ஆர். சந்தானகிருஷ்ணன் வரவேற்புடு உரையுடன் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

இவ்விழாவின் கருத்தரங்கின் தலைமை உறையை கோவை அறக்கட்டளையின் துணைத் தலைவர் பேராசிரியர் ஏ.சுப்பிரமணியன் நிகழ்த்தினார். கருத்தரங்க பேச்சாளர்கள் பேராசிரியர் டாக்டர் கே.நாகராஜன், பேராசிரியர் ஏ.சமத்துவராணி, பேராசிரியர் டாக்டர் சி.முருகேசன், பேராசிரியர் டாக்டர் எஸ். அருணா ஆகியோர் பங்கேற்று கருத்தரங்கை சிறப்பித்தனர்.





இவ்விழாவில் சுமார் 350 க்கும் மேற்பட்ட பொது மக்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், கோவை தொழில் அதிபர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், ரோட்டரி சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், பல்லடம்**
**M.C.O.P. No 27/2022**

R.கண்ணன்
...மனுதாரர்

/எதிர்/

G.சசிக்குமார், த/பெ.கோவிந்தன்,
நெ.1A2, பழனி கவுண்டர் தெரு,
ராயர்பாளையம்,
பல்லடம், திருப்பூர் -641604
...1-ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரருக்கு கடந்த 24.7.2022 ஆம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் காயம் அடைந்தற்காக நஷ்ட ஈடு கோரி, ஷை நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து, மேற்படி மனுவானது எதிர்வரும் 11.09.2024-ம் தேதி அன்று 1-ம் எதிர்மனுதாரரான தாங்கள் ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நீவீர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணை ஏதும் இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்

**V.மோகன்,** B.A.,BL.
**S.குமார்**, B.Com.,BL.,
வழக்கறிஞர்கள்,
திருப்பூர்



**சிறப்பு மாவட்ட மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம், திருப்பூர்**
**MCOP.No. 190/24**

சுப்பிரமணி, வயது 58,
S/o. வீரப்பா, 15-A, சத்யா நகர்
முதல் வீதி, காந்தி நகர், திருப்பூர்.
...மனுதாரர்

எதிர்

ஸ்ரீ மீனாட்சி சரஸ்வதி டிரான்ஸ்போர்ட்
அதன் மேலாளர் No. 144, ஈஸ்வரன்
கோவில் வீதி, திருப்பூர் - 641602.
.. எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

ஷை மனுதாரர் கடந்த 1.2.24-ம் தேதி ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் கொடுங்காயமடைந்ததற்கு ரூ.20,00,000, நஷ்ட ஈடு கோரி ஷை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது வரும் 17.10.24-ம் தேதிக்கு 2 -ம் எதிர்மனுதாரர் ஆகிய நீர் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே 17.10.24-ம் தேதி காலை 10.30 மணிக்கும் எதிர் மனுதாரர் ஆகிய நீர் ஷை கோர்ட்டில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது தவறும்பட்சம் மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

(கோர்ட்டார் உத்தரவுப்படி)
M.Palaniswami, M.Sc. B.L
Advocate, Tirupur.



**சிறப்பு மாவட்ட மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம், திருப்பூர்**
**MCOP.No. 193/24**

கிருஷ்ணவேணி, வயது 57,
W/o. சுப்பிரமணி,
15-A, சத்யா நகர், முதல் வீதி,
காந்தி நகர், திருப்பூர்.
...மனுதாரர்

எதிர்

ஸ்ரீ மீனாட்சி சரஸ்வதி டிரான்ஸ்போர்ட்
அதன் மேலாளர் No. 144, ஈஸ்வரன்
கோவில் வீதி, திருப்பூர் - 641602.
...2-ம் எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

ஷை மனுதாரர் கடந்த 1.2. 24-ம் தேதி ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் கொடுங்காயமடைந்ததற்கு ரூ.10,00,000, நஷ்ட ஈடு கோரி ஷை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது வரும் 18.11.24-ம் தேதிக்கு 2 -ம் எதிர்மனுதாரர் ஆகிய நீர் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே 18.11.24-ம் தேதி காலை 10.30 மணிக்கு ம் எதிர் மனுதாரர் ஆகிய நீர் ஷை கோர்ட்டில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது தவறும்பட்சம் மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

(கோர்ட்டார் உத்தரவுப்படி)
M.Palaniswami, M.Sc. B.L
Advocate, Tirupur.



**மதிப்புமிகு சிறப்பு மாவட்ட மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்- திருப்பூர்**
**MCOP 1110/2023**

பத்மாவதி மகாராஜன்
க/பெ. மகாராஜன்
கதவு எண். 1/233, அவிநாசி நகர்,
போயம்பாளையம்,
பூலுவப்பட்டி,
திருப்பூர் - 641604.
...மனுதாரர்

எதிர்

மதியழகன்,
த/பெ. பிச்சை,
கதவு எண். 910/2A,
குருவாயூரப்பன் நகர்,
AD காலனி,
திருப்பூர் வடக்கு- 641602
...1-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் கடந்த 01.8.2023 அன்று சாலை விபத்தில் கொடுங்காயம் அடைந்ததற்காக நஷ்ட ஈடு கோரி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவானது எதிர்வரும் 27.9.2024-ம் தேதியன்று 1-ம் எதிர்மனுதாரராகி நீங்கள் ஆஜராக வேண்டி வாய்த கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாய்தா தேதியன்று மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனை ஏதும் இருப்பின் தெரிவித்துக் கொள் வேண்டியது. தவறும் பச்சம் மேற்படி மனுவானது ஒருதலை பட்சமா தீர்மானிக்கப்படும் என்பதனை இதன் மூலம் அறியவும்

(கோர்ட் உத்தரவுப்படி)
A. செல்லகிருஷ்ணன், பி.பி.ஏ.பி.எல்.,
அட்வகேட், திருப்பூர்



**சிறப்பு மாவட்ட மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம், திருப்பூர்**
**MCOP.No. 1474/16**

1. லட்சுமி, 48 வயது, W/o. ராஜ் (late)
2. R. செந்தில்குமார், 35 வயது
S/o. ராஜ் (late)
3. சீனிதேவர், 66 வயது
4. காளீஸ்வரி, 25 வயது
5. மைனர். திருகுமரன் பாதுகாவலர்
தாய் காளீஸ்வரி எண். 58, தெற்கு
தெரு, ஆவரந்தை, இராஜபாளையம்,
சோழபுரம் தெற்கு, விருதுநகர் Nowat:
பூமாக்ஸ் தோட்டம், பெருந்தொழுவு
ரோடு, திருப்பூர்.
...மனுதாரர்

எதிர்

A. மோகன், S/o. அருணாச்சலா Gr.
1A, தென்னம்பாளையம்,
திருப்பூர்-641604
. எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

ஷை மனுதாரர்களின் கணவர் ராஜா 7.4.16-ம் தேதி ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் அடிபட்டு இறந்ததற்காக ரூ.30,00,000, நஷ்ட ஈடு கோரி ஷை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது வரும் 19.9.24-ம் தேதிக்கு 3-ம் எதிர்மனுதாரர்கள் ஆகிய நீர், நீங்கள் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே 19.9.24-ம் தேதி காலை 10.30 மணிக்கும் 3-ம் எதிர் மனுதாரர்கள் ஆகிய நீர், நீங்கள் ஷை கோர்ட்டில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது தவறும்பட்சம் மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

(கோர்ட்டார் உத்தரவுப்படி)
M.Palaniswami, M.Sc. B.L
Advocate, Tirupur.



**பிரத்யோக மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம், திருப்பூர்**
**MCOP.No.751/12**

முத்துமாணிக்கம் @ கிருஷ்ணன்,
வயது 54, S/o. ராமசாமி,
1.A. மகாலட்சுமி மில் தெரு,
குஞ்சிபாளையம்,
கருப்பம் பாளையம் (Po)
பொள்ளாச்சி (T.K), கோவை மாவட்டம்,
...மனுதாரர்

எதிர்

செல்லதுரை, S/o. சோலை அழகு,
58, முத்துச்சாமி மெயின்வீதி,
திருப்பூர்.
..1-ம் எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

ஷை மனுதாரர் கடந்த 27.4.12-ம் தேதி ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் கொடுங்காயமடைந்ததற்கு ரூ.5,00,000 நஷ்ட ஈடு கோரி ஷை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அது வரும் 10.9.24-ம் தேதிக்கு 1-ம் எதிர் மனுதாரர் ஆகிய நீர் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே 19.9. 24 ம் தேதி காலை 10.30 மணிக்கும் எதிர் மனுதாரர் ஆகிய நீர் ஷை கோர்ட்டில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது தவறும்பட்சம் மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

(கோர்ட்டார் உத்தரவுப்படி)
M.Palaniswami, M.Sc. B.L
Advocate, Tirupur.

## 2–ம் மண்டல பாசனத்திற்கு

# திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பங்கேற்றார்!!

உடுமலை, ஆக. 19–

திருமூர்த்தி அணையிலிருந்து 2ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி அணை 60 அடி உயரம் கொண்டது பிஏபி அணைகளில் இது கடைசி அணையாகும். இந்த அணையின் மூலம் கோவை திருப்பூர் மாவட்டங்களில் சுமார் 3.77 லட்சம் ஏக்கர் நிலம் வாசன வசதி பெறுகிறது. நான்கு மண்டலமாக பிரித்து தண்ணீர் வழங்கப்படுகிறது.

அணைக்கு பரம்பிக்குளம் அணையில் இருந்து சர்க்கார் பதி வழியாக காண்டூர் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வந்து நிரப்பப்படுகிறது. தவிர பாலாறு மூலமும் தண்ணீர் வருகிறது. காண்டூர் கால்வாய் மற்றும் பிரதான கால்வாய் சீரமைப்பு பணி நிறைவுபெற்றதை அடுத்து இரண்டாம் மண்ட பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்று தண்ணீர் திறக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது அதன்படி திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடந்தது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். முதற்கட்டமாக வினாடிக்கு 250 கன அடி நீர் திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் ஈஸ்வர சாமி எம்பி மாவட்ட திமுக செயலாளர் திருப்பூர் நகராட்சி 4ம் மண்டல தலைவருமான இல.பத்மநாபன் மாவட்ட திமுகவைத் தலைவர் ஜெயராமகிருஷ்ணன் தலைமை பொறியாளர் முருகேசன் செயற்பொறியாளர்கள் மகேந்திரன் சுப்பிரமணி உதவி பொறியாளர்கள் ஆதிசிவம் முத்துக்குமார் தண்டபாணி உதவி பொறியாளர்கள் மாரிமுத்து சண்முகம் ஜெயக்குமார் முத்துக்குமார் பாசன சங்க தலைவர் மெடிக்கல் பரமசிவம் மற்றும் ஒன்றிய திமுக செயலாளர்கள் நிர்வாகிகள் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது தமிழ்நாடு முதல்வர் ஆணைப்படி பிஏபி இரண்டாம் மண்டலத்தில் 94 21 இயக்க நிலம் பாசனம் பெறும் வகையில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 16ஆம் தேதி வரை 12 நாட்களுக்கு உரிய இடைவெளி விட்டு நான்கு சுற்றுக்களாக மொத்தம் 8000 மில்லியன் கன அடி நீருக்கு மிகாமல் தண்ணீர் திறக்கப்படும் தற்போது 250 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. அதன்படி படிப்படியாக 912 அடியாக அதிகரிக்கப்படும்.

மேலும் பாலாறு பல ஆயக்கட்டு பாசனமான தளி வாய்க்கால் பகுதியில் 27 86 ஏக்கர் நிலம் பயன் பெறும் வகையில் 20 25 டே 31ஆம் தேதி வரை 700 மில்லியன் கன அடி மிகாமல் உரிய இடைவெளி விட்டு தண்ணீர் திறக்கப்படும் தடி வாய்க்காலில் வினாடிக்கு 20 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் உடுமலை மடத்துக்குளம் திருப்பூர் பல்லடம் தாராபுரம் காங்கேயம் ஆகிய வட்டங்கள் கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி சூலூர் ஆகிய வட்டங்களிலும் மொத்தம் 94 21 ஏக்க நிலங்கள் பயனடையும். தண்ணீரை சிக்கனமாக உபயோகித்து விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கூறினார்.



பெருந்துறை பேரூராட்சி கோட்டைமேடு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ வீரமாத்தி அம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழாவில் ஈரோடு புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.சி.கருப்பணன், எஸ்.ஜெயக்குமார் எம்.எல்.ஏ., கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள் ஜோதி கே.செல்வராஜ், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் வேட்டுவபாளையம் அருணாச்சலம், மாவட்ட பொருளாளர் மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு வழிபாடு செய்தனர்.

# ஆர்.என்.ரவி அவசரமாக...

1–ம் பக்கத்தொடர்ச்சி

ஆர்.என். ரவி, கடந்த 1–ஆம் தேதி சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றார். அவருடன் அவரது செயலாளர், உதவியாளர், பாதுகாப்பு அதிகாரி ஆகியோரும் புறப்பட்டு சென்றனர். டெல்லி சென்ற கவர்னர் ரவி, அங்கு கவர்னர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரையும் சந்தித்து பேசினார். அதன் பின்னரும் அவர் கவர்னர் பதவியில் நீடிப்பதற்கான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

எனவே கவர்னர் பதவியில் அவர் தொடர்ந்து நீடிப்பார் என அனைவரும் எதிர்பார்த்தனர். இந்நிலையில் இன்று மீண்டும் டெல்லி செல்கிறார். மாலை 5.10 மணிக்கு விமானத்தில் பயணம் மேற்கொள்கிறார். உடன் அவரது செயலாளர், உதவியாளரும் செல்கின்றனர். டெல்லி செல்லும் கவர்னர் ஆர்.என். ரவி அங்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமி த்ஷா மற்றும் ஜனாதிபதி மாளிகை அதிகாரிகளை சந்திக்கிறார். அப்போது தனது பதவி நீட்டிப்பு குறித்து பேசுவார் என தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த மாதத்தில் இன்று அவர் 2–ஆவது முறையாக டெல்லி சென்று பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சரை சந்திப்பது முக்கியத்து வம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# தொடர்ந்து பரப்பப்படும் அவதூறுகள்; திருச்சி எஸ்.பி. மீண்டும் எச்சரிக்கை!

திருச்சி, ஆக. 19–

முன்னாள் முதல்வர் கருணாநிதியை அவதூறு செய்யும் வகையில் பேசிய நாம் தமிழர் கட்சி நிர்வாகி சாட்டை துரைமுருகன் திருச்சி போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அப்போது கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சாட்டை துரைமுருகன் ஆகியோர் பேசிய ஆடியோ வெளியானது.

அதில், கட்சி நிர்வாகிகளை சீமான் விமர்சித்துப் பேசியது சர்ச்சையானது. தொடர்ந்து, சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய சீமான், திருச்சி எஸ்.பி. வருண்குமார் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளை மறைமுகமாக விமர்சித்துப் பேசினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் எஸ்.பி. வருண்குமார் சீமானின் பேச்சை 'டேக்' செய்து, தனது எக்ஸ் பக்கத்தில் 'கொச்சையான பொய்களை மக்கள் ஏற்க மாட்டார்கள். சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றம் மூலம் சந்திப்பேன்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, எஸ்.பி. பதிவுக்கு நாதகவினர் பலரும் கடுமையாக விமர்சித்தும், கொச்சையாகவும், ஆபாசமாகவும் கருத்துகளை பதிவிட்டனர். மேலும், எஸ்.பி.யின் தாயார், மனைவியும், புதுக்கோட்டை எஸ்.பி.யுமான வந்திதா பாண்டே ஆகியோரை விமர்சித்துப் பதிவுகள் வந்தன.

இந்நிலையில், எஸ்.பி. வருண்குமார் நேற்று தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் வாரப்பத்திரிகை ஒன்றின் யூடியூப் சேனலில் வெளியான செய்தியை 'டேக்' செய்து, "இதை தூண்டிவிட்ட நபர்களை நீதித் துறை முன் நிறுத்துவேன். வெளிநாடுகளிலிருந்து ஆபாசமாகப் பதிவு செய்யும் போலி ஐ.டி.க்களையும் விடப்போவதில்லை. சட்டத்தின் மேல், நீதித் துறையின் மேல் 100 சதவீதம் எனது நம்பிக்கையை வைக்கிறேன். ஆபாசத்துக்கும், அவதூறுக்கும் இறுதி முடிவுரை எழுதுவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து காவல் துறை வட்டாரத்தில் விசாரித்தபோது, "எஸ்.பி. வருண்குமார், அவரது குடும்பத்தினர் குறித்து பதிவிடப்படும் அவதூறு கருத்துகளை சைபர் க்ரைம் போலீஸார் கண்காணித்து வருகின்றனர். தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

இதற்கிடையே, "எஸ்.பி. வருண்குமார் மீதான அவதூறு கருத்துக்கும், எனக்கும் தொடர்பில்லை. போலி ஐ.டி. மூலம் சமூக வலைதளத்தில் பதிவிடப்படும் கருத்துக்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்" என்று சீமான் செய்தியாளர்களிடம் நேற்று கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

## செப்.7 விநாயகர் சதுர்த்தி விழா:

# சிலைகள் வைப்பதற்கு காவல்துறை கட்டுப்பாடு!

சென்னை, ஆக.19–

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி தமிழகம் முழுவதும் விநாயகர் சிலை வைப்பதற்கு காவல் துறை கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

விநாயகர் சதுர்த்தி விழா செப்.7ம் தேதி கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தியையொட்டி பொதுமக்கள், இந்து அமைப்பினர், வீடுகள் மற்றும் தெருக்களில் விநாயகர் சிலைகளை பிரதிஷ்டை செய்து வழிபடுவார்கள். இதையடுத்து அந்த சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர்நிலைகளில் கரைப்பார்கள்.

இந்த ஆண்டு சென்னையில் மட்டும் இந்து முன்னணி சார்பில் 5,501 சிலைகள் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இந்து அமைப்புகள் காவல்துறையினரிடம் அனுமதி கோரி வருகின்றனர். ஏற்கெனவே அனுமதிக்கப்படாத புதிய இடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்யவும், ஊர்வலம் செல்லவும் அனுமதி வழங்க வேண்டும் என காவல்துறையினரிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்நிலையில், விநாயகர் சதுர்த்தி பாதுகாப்பு பணிகளை மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் திட்டமிடுமாறு டிஜிபி சங்கர் ஜிவால் போலீஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். மேலும், விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டத்துக்கான கட்டுப்பாடுகளையும், வழிமுறைகளையும் சங்கர் ஜிவால் விதித்து, அனைத்து மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

அதில், விநாயகர் சிலைகள் களிமண்ணால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வகுத்துள்ள விதிமுறை களின் படி, ரசாயன கலவை இல்லாத சிலைகளை மட்டுமே வைக்க வேண்டும். விநாயகர் சிலைகள் மேடையுடன் சேர்த்து 10 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும். பிற மத ஸ்தலங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சிலைகளை வைக்கக் கூடாது. மதவெறி தூண்டும் வகையில், பிற மதத்தினரின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் முழக்கங்களை எழுப்புவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது.

விநாயகர் சிலைகள் வைக்கும் இடங்கள், ஊர்வலம் செல்லும் இடங்கள், கரைக்கும் இடங்களில் பட்டாசு வெடிக்க கூடாது. மினி லாரி மற்றும் டிராக்டர்களில் மட்டுமே சிலைகளை கொண்டு செல்ல வேண்டும். மாட்டு வண்டி, 3 சக்கர வாகனங்களில் எடுத்து செல்லக் கூடாது. ஒலிபெருக்கி வைப்பதற்கு காவல் ஆய்வாளரிடம் உரிய அனுமதி பெற்றிருக்க வேண்டும். எங்கிருந்து மின்சாரம் பெறப்படுகிறது என்பதை கடிதம் மூலம் மின்சார வாரியத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். பொது இடங்களில் சிலை வைக்க உள்ளாட்சி அமைப்பு அனுமதி அவசியம்.

மேலும், பயங்கரவாத இயக்கத்தினர் அச்சுறுத்தல் இருப்பதால், காவல் துறை அதிகாரிகள் வழக்கமாக வழங்கும் பாதுகாப்பை காட்டிலும் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த அறிக்கையை ஆக.28ம் தேதிக்குள் டிஜிபி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கடந்த காலங்களில் எந்தெந்த இடங்களில் சிலைகள் வைக்கப்பட்டதோ அங்கு தான் சிலைகள் வைக்க அனுமதிக்க வேண்டும்.

புதிய மற்றும் பதற்றமான இடங்களில் சிலைகள் வைக்க அனுமதிக்க கூடாது. உரிய அனுமதி இல்லாமல், பேனர்கள், கொடிகள் கட்டுவதை தடுக்க வேண்டும். சிலைகளை கரைப்பதற்கு முன்பாக சிலைகளில் அணிவிக்கப்பட்டுள்ள துணிகள், பிளாஸ்டிக்கால் ஆன பொருட்கள், பூஜை பொருட்களை முற்றிலும் அகற்றிட வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டள்ளது.

## முன்னாள் கிரிக்கெட் வீரர்

# ஹர்பஜன் சிங் எம்.பி. மே.வங்க அரசுக்கு கடிதம்

புது டெல்லி, ஆக.19–

முன்னாள் கிரிக்கெட் வீரரும் ஆம் ஆத்மி எம்.பி.யுமான ஹர்பஜன் சிங் மேற்கு வங்க ஆளுநர் ஆனந்த் போஸ் மற்றும் முதல்வர் மம்தா பானர்ஜி ஆகியோருக்கு கடிதம் எழுதி உள்ளார்.



அதில் அவர் 6றியதாவது; கொல்கத்தா மருத்துவமனையில் பெண் மருத்துவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவது வேதனை அளிக்கிறது. நம் அனைவரின் மனசாட்சியையும் உலுக்கிய இந்த வன்முறை செயல், ஒரு தனிநபருக்கு எதிரான கொடூரமான குற்றம் மட்டுமல்ல, நமது சமூகத்தில் உள்ள ஒவ்வொரு .பெண்ணின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பின் மீதான கடுமையான தாக்குதல் ஆகும். இது நம்முடைய சமூகத்தில் ஆளாக வேரூன்றிய பிரச்சினைகளின் பிரதிபலிப்பு ஆகும். நோயாளிகளின் உயிரை பாதுகாக்கக்6டிய மருத்துவமனை வளாகத்திலேயே இதுபோன்ற கொடூரமான .செயல் நடைப்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்துக்கு மேல் ஆகியும், குற்றவாளிகள் மீது உறுதியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் மருத்துவர்கள் சாலையில் இறங்கி போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. நீதி கேட்டு நடைபெறும் இந்தப் போராட்டத்துக்கு முழு மனதுடன் என் ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்த மேற்கு வங்க அரசும் சிபிஐ அமைப்பும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வரும் காலத்தில் இதுபோன்ற குற்றங்கள் நடைப்பெறுவதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவித்தார்.



பணி மாறுதலாகி செல்லும் டி.எஸ்.பி.சிந்துவுக்கு பாலக்கோட்டில் நடந்த பிரியாவிடை நிகழ்ச்சி டி.எஸ்.பி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பயிற்சி டி.எஸ்.பி. ரமலிராமலஷ்மி உள்பட பலர் பங்கேற்றனர்.

மாலை முரசு கோவை
முரசம்
19-08-2024

# டெல்டா விவசாயிகளின் எதிர்பார்ப்பு!

ஆண்டுதோறும் கர்நாடக அரசிடம் தண்ணீர் திறந்து விடக் கோரி நடுவர் மன்றத்தில் முறையிடுவதும், பதிலுக்கு கர்நாடக அரசு போதுமான தண்ணீர் இல்லை என முரண்டு பிடிப்பதும் தமிழக விவசாயிகளிடம் சலிப்பை ஏற்படுத்தி வருகிறது. நடப்பு ஆண்டிலும் இதே நிலை நீடித்துக் கொண்டிருந்தபோது கர்நாடக அணை பகுதிகளில் பெய்த கனமழையால் அங்குள்ள அணைகளும் தமிழகத்தில் மேட்டூர் அணையும் நிரம்பி வழிகிறது. இதனால் 35 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து நான்காவது நாளில் 120 அடியை எட்டியது. அதன் பின்னரும் தண்ணீர் வந்து கொண்டிருந்ததால் அதைத் தேக்க முடியாமல் திறந்து விடப்பட்டது. குறிப்பாக திருச்சி முக்கொம்பு வந்து சேர்ந்த உபரி நீர் வழக்கம் போல் கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டு இரண்டே நாட்களில் 35 டிஎம்சி தண்ணீர் வங்கக் கடலில் கலந்து வீணானது.

கர்நாடகாவில் கனமழை பெய்யும் போதெல்லாம் தமிழகத்திற்கு வரும் உபரி நீரின் நிலை விவசாயத்திற்கு பலனளிக்காமல் தொடர்ந்து வீணடிக்கப்படுவது, விவசாயிகளிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி யுள்ளது. இதைத் தவிர்க்க கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கைக்கு அரசு செவி சாய்க்கவில்லை. கொள்ளிடம் ஆற்றில் 19 இடங்களில் இப்போது கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் கொள்ளிடம் ஆற்றில் உப்புத்தன்மை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது அதை குறைக்கவும், மழைக் காலங்களில் கொள்ளிடம் ஆற்றில் திறக்கப்படும் நீரை சேமிக்கவும், கொள்ளிடம் ஆற்றில் 5 கிலோ மீட்டருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 14 இடங்களில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் விவசாயிகளிடம் உள்ளது.

இரண்டாவதாக, கொள்ளிடம் மற்றும் காவிரி ஆற்றில் திறந்த வெளிக் கிணறுகளை உருவாக்க முடியும். மேலணையில் இருந்து பூம்புகார் வரை அரை கிலோ மீட்டருக்கு ஒன்று என்ற விகிதத்தில் இந்தக் கிணறுகளை அமைத்தால் வெள்ளநீர் வரும்போது ஒவ்வொரு கிணறு வழியாகவும் சென்று அப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வாய்ப்பு உருவாகும். சோழ மன்னர்கள் காலத்தில் ஆறுகளில் அதிக தண்ணீர் வரும்போது இது போன்ற கிணறுகளை உருவாக்கி கூடுதல் தண்ணீரை பூமிக்குள்ளே நிலை நிறுத்திக் கொண்டுள்ளனர். அதேபோல் இப்போதும் திறந்தவெளி கிணறுகளை உருவாக்கி தண்ணீரை சேகரிக்க முடியும்.

மேட்டூர் அணைக்கு அதிகமான தண்ணீர் வரும்போது காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் உள்ளிட்ட ஆறுகளில் ஓரளவுக்குத்தான் தண்ணீர் திறந்து விட முடிகிறது. அதிக அளவில் தண்ணீரை திறந்து விட்டால் கரைகள் உடையும் அபாயம் ஏற்படுகிறது. காவிரி ஆறு முழுவதையும் தூர்வாரும் திட்டங்களை முறையாக கொண்டு வர வேண்டும். இதை முழுமையாக செய்யாமல் ஒவ்வொரு ஆண்டும் அணை திறக்க உள்ள நேரத்தில் கடைசி பத்து நாட்களில் தூர்வாரும் திட்டத்தைச் செயல்படுத்துவதால் எந்த பயனும் ஏற்படுவதில்லை. ஏரிகள், குளங்கள் பெரும் வாய்க்கால்கள் இங்கெல்லாம் தண்ணீர் செல்லும் வழியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் வீணாகும் உபரி நீரை முழுமையாக சேமிக்க முடியும்.

டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடிக்கான ஆயத்தப் பணிகளை மிக தீவிரமாக விவசாயிகள் தொடங்கி உள்ளனர். அவ்வப்போது கையும் மழை மற்றும் ஆறுகளில் வரும் தண்ணீர் ஆகியவற்றை கொண்டு நிலத்தை உழுது நடவுக்கு தயார்படுத்தும் பணிகளை விவசாயிகள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். நடப்பாண்டில் மேட்டூர் அணை நிரம்பி இருப்பதால் கூடுதலான பரப்பில் சாகுபடி நடைபெற வாய்ப்பு உள்ளது. நீண்ட காலம் விதை ரகங்களை தேர்வு செய்யும் விவசாயிகள் அடுத்த மாதம் செப்டம்பர் முதல் வாரத்தில் நாற்றங்கால்களை தயார் செய்ய தொடங்குவார்கள். செப்டம்பர் இறுதி மற்றும் அக்டோபர் மாதங்களில் நடவு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

விவசாய பணியில் பாரம்பரியமாக ஈடுபட்டு வரும் மூத்த குடிமக்களின் கருத்திற்கேற்ப தமிழ்நாடு அரசு கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணைகளைக் கட்டுவதோடு காவிரி ஆறு முழுவதையும் போர்க்கால அடிப்படையில் தூர்வாரி அதற்கான பணிகளை நிபுணர் குழு அமைத்து கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் டெல்டா மாவட்டங்கள் வளம் கொழிக்கும் பூமியாக மாற்ற முடியும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதை செய்வதற்கு அரசு தயாராக வேண்டும் என்பதுதான் டெல்டா விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# ஒரு ரூபாய்கூட ஊதியம் பெறாத முகேஷ் அம்பானி!



மும்பை, ஆக.19–

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான முகேஷ் அம்பானி 2023 – 24 நிதி ஆண்டில், தன்னுடைய பணிக்கான ஊதியமாக ஒரு ரூபாய் கூட பெறவில்லை என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

2020–21 நிதி ஆண்டு கொரோனா காலகட்டத்தில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தி லிருந்து ஊதியம் பெறப்போவதில்லை என்று முகேஷ் அம்பானி அறிவித்தார்.

அடுத்தடுத்த நிதி ஆண்டுகளிலும் அது தொடர்ந்தது. இந்நிலையில், தொடர்ந்து நான்காவது முறையாக 2023 – 24 நிதி ஆண்டிலும் அவர் ஊதியம் எதுவும் பெறவில்லை.

அதே சமயம், நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளுக்கான ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது.

அம்பானியின் வீட்டு சமையல்காரர்கள், காவல் ஆட்கள், வீட்டு பராமரிப்பு ஊழியர்கள் என அவரது வீட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கணிசமான சம்பளமும், பல்வேறு வசதிகளும் வழங்கப்படுகின்றன. கார் ஓட்டுநர்களுக்கு ஆண்டுக்கு ரூ.24 லட்சம் சம்பளமாக வழங்கப்படுவதாக 2017 ம் ஆண்டு வெளியான வீடியோ ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முகேஷ் அம்பானி 114 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரராகவும் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் 12வது இடத்திலும் உள்ளார். அவரது ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், எரிசக்தி, பெட்ரோகெமிக்கல், டெக்ஸ்டைல், சில்லறை வணிகம், தொலைத் தொடர்பு என பல தளங்களில் செயல்பட்டு வருகிறது.

முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானியின் திருமணம் சமீபத்தில் மிக பிரம்மாண்டமாக நடந்து முடிந்தது. திருமணச் செலவு ரூ.5,000 கோடி ஆகும்.

# அம்மா மருந்தகம், முதல்வர் மருந்தகம் இரண்டுக்கும் எந்த தொடர்பும் இல்லை!

## அமைச்சர் விளக்கம்!!

சென்னை,ஆக.19–

முதல்வர் மருந்தகத்துக்கும், அம்மா மருந்தகத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். சென்னை சைதாப்பேட்டை மருத்துவமனையில் ரூ.1.20 கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைத்தார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:



இந்த மருத்துவமனை ஒரு நூற்றாண்டை கடந்த பழமைவாய்ந்த மருத்துவமனையாகும். பழமை வாய்ந்த இந்த மருத்துவமனை கடந்த காலங்களில் கண்டுகொள்ளாமல் இருந்தது. இந்த மருத்துவமனையில் ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையம் 6 தளங்களுடன் கூடிய ஒரு பிரம்மாண்டமான கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 36 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருந்தது. தினந்தோறும் 1000க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் இந்த மருத்துவமனையை பயன்படுத்தி வந்த நிலையில், தற்போது 1500க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு வருகிறார்கள்.

வருகிற ஜனவரி மாதம் பணிகள் அனைத்தும் நிறைவடைந்து தமிழக முதல்வர் இந்த மருத்துவமனையை திறந்து வைக்கும்போது, 200 படுக்கைகள் கொண்ட ஒரு பிரம்மாண்ட மருத்துவ சேவையை இந்த மருத்துவமனை வழங்க உள்ளது.

மேலும், இந்த மருத்துவமனையில் 10,076 முறை செயற்கை சிறுநீரக சுத்திகரிப்பு செய்யப்பட்டு மருத்துவசாதனைபுரிந்துள்ளது. கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் இதுவரை 3,13,864 புறநோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும் 75,316 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வீடு திரும்பி உள்ளனர். இதுவரை 2,800 அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாகநடந்துமுடிந்துள்ளன. மேலும் 9,19,318 ரத்த பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன.

உலகம் முழுவதும் குரங்கம்மை பாதிப்பு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. தமிழகத்தில் குரங்கம்மை பாதிப்பு யாருக்கும் இல்லை. சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங்களில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களை குரங்கம்மை இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். தைப்பொங்கல் அன்று 1000 இடங்களில் முதல்வர் மருந்தகம் பயன்பாட்டுக்கு வரும். இந்தத் திட்டத்துக்கும், அம்மா மருந்தகம் என்ற பெயருக்கும் எந்த தொடர்பும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.



தர்மபுரி மாவட்ட விளையாட்டரங்கில், விளையாட்டு விடுதி மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், உணவு சமைப்பதற்கு வழங்கப்படும் பொருட்களின் இருப்பு குறித்தும் கலெக்டர் சாந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் சாந்தி உள்ளார்.

### கோவை யோகா மருத்துவமனையில்

# முன்னாள் ராணுவ வீரரிடம் 7½ பவுன் நகை திருட்டு!

கோவை, ஆக. 19–

திருச்சி அன்னை நகர் பகுதியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (61). இவர் ராணுவத் தில் பாதுகாப்பு துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றார். இந்த நிலையில் இவர் சர்க் கரை நோய் உள்ளிட்ட பல் வேறு நோய் பாதிப்பால் அவதிப்பட்டு வந்தார்.

இதற்காக அவர் கடந்த 6ந் தேதி கோவை வடவள்ளி மருதமலை ரோட்டில் உள்ள தனியார் இயற்கை, யோகா மருத்துவமனைக்குசிகிச்சைக்காக வந்தார். அங்கு அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற் றார். கடந்த 7ந் தேதி அவர் தான் அணிந்து இருந்த 7½ பவுன் தங்க சங்கிலியை கழற்றி தனது பேக்கில் வைத்து இருந்தார். 2 நாட்கள் கழித்து அவருக்கு மருத்துவமனையில் வேறு அறை ஒதுக்கப்பட்டது. அங்கு செல்வதற்காக தனது பேக்கை பார்த்தபோது அதில் இருந்த 7½ பவுன் நகையை காணவில்லை. நகையை பேக்கில் வைத்ததை நோட்டமிட்டு மர்ம நபர் திருடிச் சென்றது தெரியவந் தது.

இதுகுறித்து ராமகிருஷ்ணன் வடவள்ளி போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அத்துடன் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து மர்ம நபரை தேடி வருகின்றனர்.

### ஒட்டன்சத்திரம் அருகே

# அருவியில் குளிக்க சென்ற இளைஞர் நீரில் மூழ்கி பலி!

ஒட்டன்சத்திரம்,ஆக.19–

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி பகுதியை சேர்ந்தவர் கார்த்திக் குமார் (23). தேநீர் கடையில் வேலை செய்து வந்தார்.இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை தனது நண்பருடன் சேர்ந்து ஒட்டன்சத்திரம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி விருப்பாச்சி தலையூற்று மேல் பகுதியில் உள்ள அருவிகள் குளிக்க சென்று உள்ளார்.அப்போது எதிர்பாராமல் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.



இது குறித்து தகவல் அறிந்த ஒட்டன்சத்திரம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு சென்று அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.இவருக்கு திருமணமாகி மனைவி தரணி தேவி மற்றும் 8 மாத பெண்குழந்தை உள்ளது. மேலும் இது குறித்து ஒட்டன்சத்திரம் போலீசார் வழக்கு பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

### தம்மம்பட்டியில்

# வெண்டைக்காய் விலை வீழ்ச்சி!

தம்மம்பட்டி, ஆக.19–

தம்மம்பட்டி பகுதியில் வெண்டைக்காய் விலை வீழ்ச்சியால் அதை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தம்மம்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான செந்தாரப்பட்டி, கொண்டயம்பள்ளி, உலிபுரம், வாழக்கோம்பை, ஜங்கமசமுத்திரம், நாகியம்பட்டி உள்ளிட்ட கிராமப்பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் வெண்டைக்காய் சாகுபடி செய்து வருகின்றனர்.

தம்மம்பட்டியில் உள்ள காய்கறி கமிசன் மண்டிகளில், கடந்த மாதம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.25 வரை விற்பனையானது. இந்நிலையில் அண்மையில் கேரள மாநிலம், வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவினைஅடுத்துவியாபாரிகள் வெண்டைக்காய்களை கேரளாவிற்கு அனுப்பாததால், தேக்கமடைந்துள்ளது.அதனால் தற்போது, அதிகபட்சமாக கிலோ ஒன்றுக்கு ரூ.6 வரை மட்டுமே உள்ளூர் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். விலை குறைந்ததால் வெண்டை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.



தாராபுரத்தில் திமுக தெற்கு மாவட்ட இலக்கிய அணி மற்றும் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை இணைந்து நடத்திய கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி மற்றும் கவிதைகள் ஒப்புவித்தல் போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. தெற்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றிய செயலாளர் எஸ்.வி. செந்தில் குமார் நகரக் செயலாளர் முருகானந்தம் நகர் மன்ற தலைவர் பாப்பு கண்ணன் பங்கேற்றனர்.

### கோவை தடாகம் அருகே

# குரங்குக்குட்டியை வீட்டில் வளர்த்த தம்பதி கைது!

கோவை, ஆக. 19–

குரங்குக்குட்டியை விலைக்கு வாங்கி வீட்டில் வளர்த்த தம்பதியை வனத்துறையினர் கைது செய்தனர்.

கோவை வனச் சரகம், தடாகம் சுற்றுக்கு உள்பட்ட காட்டூர் நஞ்சப்பா சாலையில் வசித்து வரும் பெருமாள், சகுந்தலா தம்பதிவீட்டில்குரங்குக்குட்டி ஒன்றை வளர்ப்பதாக வனத் துறையின ருக்கு தகவல் கிடைத்தது. இந்தத் தகவலின் அடிப்படையில் அங்கு சென்று வனத்துறையினர் ஆய்வு செய்தபோது சுமார் இரண்டு மாதங்களான குரங்குக்குட்டி ஒன்றை கடந்த ஒரு மாதமாக வீட்டில் கூண்டில் வைத்து வளர்த்து வந்தது தெரிய வந்தது.

விசாரணையில், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ரூ.5,000 கொடுத்து குரங்குக்குட்டியை விலைக்கு வாங்கி வந்ததாக தெரிவித் துள்ளனர். இதனையடுத்து பெருமாள், சகுந்தலா தம்பதி மீது வன உயிரின குற்ற வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர். பின்னர் மீட்கப்பட்ட குரங்குக்குட்டியை கோவைமாவட்ட வன அலுவலகத்தில் உள்ள வன விலங்குகள் மறுவாழ்வு மையத்துக்கு கொண்டுச் சென்றனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், மீட்கப்பட்ட குரங்குக் குட்டியை தற்போது வனத்துறையினரின் கட்டுப்பாட் டில் பராமரித்து வருவதாகவும், அது மனிதர்களுடன் இருந்ததால் கூட்டத்துடன் இணைவது கடினம் என்பதால், வனப் பகுதியில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலைக்கு குரங்குக்குட்டி வந்தவுடன்அதனைவனப் பகுதிக்குள் விடுவிப்போம், அதுவரை வன விலங்குகள் மறு வாழ்வு மையத்தில் பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாக தெரிவித்தனர்.

### சேலை கழுத்தை இறுக்கியதால்

# தொட்டிலில் விளையாடிய 4 வயது சிறுமி சாவு!

ஓசூர்,ஆக.19–

பேரிகை அருகே தொட்டில் சேலை கழுத்தில் இறுக்கி 4 வயது குழந்தை பரிதாபமாக இறந்தது.

அசாம் மாநிலத்தை சேர்ந்தவர் ரஞ்சித் சாகு. இவரது மகள் பூனம் (4). ரஞ்சித் சாகு குடும்பத்துடன் பேரிகை அருகே தண்ணீர் குண்டலப்பள்ளியில தங்கி சமையலராக வேலை செய்து வருகிறார்.

கடந்த 17–ந் தேதி மதியம் குழந்தை பூனம் வீட்டில் புடவையால் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது புடவை குழந்தையின் கழுத்தில் இறுக்கியது. இதில் குழந்தை மூச்சு திணறி இறந்தது. இது குறித்து தகவல் அறிந்த பேரிகை போலீசார் குழந்தையின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஓசூர்அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# எண்ணெய் வாங்கி ரூ.6.74 லட்சம் மோசடி!

## கோவையைச் சேர்ந்த 3 பேர் மீது வழக்கு!!

கோவை, ஆக. 19–

கோவை மற்றும் கேரளத்தைச் சேர்ந்த இரண்டு எண்ணெய் ஆலைகளில் எண்ணெய் வாங்கி ரூ.6.74 லட்சம் மோசடி செய்ததாக கோவையைச் சேர்ந்த 3 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை, சீரநாய க்கன்பாளையம் ராதகிருஷ்ணன் வீதியைச் சேர்ந்தவர் சுப்பிரமணியம் மகள் சித்ரா (35). இவர் தேங்காய் எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் உற்பத்தி செய்து மொத் தம் மற்றும் சில்லறையாக விற்பனை செய்து வருகிறார்.

இந்நிலையில் சுந்தரா புரம் பகுதியைச் சேர்ந்த முகமது செரீப் என்பவர்சித்ராவை தொடர்பு கொண்டு தங்களுக்கு 120 கேன் கடலை எண்ணெய் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து வாகனம் மூலம் சித்ரா எண்ணெயை அனுப்பி வைத்துள்ளார். அதற்காக ரூ.99 ஆயிரத்தை முகமது செரீப், சித் ராவின் வங்கிக் கணக்கில் செலுத்தியுள்ளார். மீதமுள்ள ரூ.3.98 லட்சத்தை வங்கிக் கணக்குக்கு அனுப்புவதாக கூறியுள்ளார்.

ஆனால் பணத்தை கொடுக்காமல் மோசடி செய்துள்ளார். இது குறித்து சித்ரா அளித்த புகாரின் பேரில், முகமது செரீப், அவரது கூட்டாளிகளான அலெக்ஸ், அந்தோணி ஆகியோர் மீது போத்தனூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த தனியார் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலை மேலாளரான அதிரா என் பவரை தொடர்பு கொண்ட முகமது செரீப் 1.5 டன் தேங்காய் எண்ணெயை வாங்கியுள்ளார். இதில் ரூ.2.75 லட்சம் மோசடி செய்துள்ளார். இது குறித்து அதிரா அளித்த புகாரின்பேரில், முகமது செரீப் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து விசா ரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் நிறுவன ஊழியரிடம் ரூ.18.65 லட்சம் நூதன மோசடி!

## சைபர் கிரைம் போலீசார் விசாரணை!!

கிருஷ்ணகிரி,ஆக.19–

பங்கு சந்தையில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என கூறி தனியார் நிறுவன ஊழியரிடம் ரூ.18 லட்சத்து 65 ஆயிரம் மோசடி செய்தது தொடர்பாக சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கிருஷ்ணகிரி அருகே உள்ள கிராமத்தை சேர்ந்தவர் 36 வயதுடைய தனியார் நிறுவன ஊழியர். கடந்த 3.7.2024 அன்று இவரது செல்போனில் வாட்ஸ்அப் செயலிக்கு ஒரு குறுந்தகவல் வந்தது.

இதில் ஷேர்மார்க்கெட்டில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் என்றுகூறப்பட்டிருந்தது. இதற்காக லிங்க் ஒன்றும் அனுப்பப்பட்டிருந்தது. அந்த லிங்கிற்குள் சென்ற தனியார் நிறுவன ஊழியர் அதில் விவரங்களை பதிவு செய்தார். பின்னர் அவர் பணம் முதலீடு செய்தார்.

முதலில் லாபம் வரவே பின்னர் தான் வைத்திருந்த ரூ.18 லட்சத்து 65 ஆயிரத்தை ஷேர் மார்க்கெட்டில் முதலீடு செய்வதற்காக வெவ்வேறு வங்கி கணக்குகளுக்கு அனுப்பி வைத்தார். இதன் பின்னர் அந்த நபருக்கு எந்த வித தகவலும் வரவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த தனியார் நிறுவன ஊழியர் தனக்கு குறுந்தகவல் வந்த எண்ணை தொடர்பு கொண்ட போது போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த தனியார் நிறுவனஊழியர்அதுகுறித்து, கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அந்த புகாரின் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் கவிதா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

தினந்தோறும்
சினிமா செய்திகள்
வெளிவரும்

# வாலாங்குளத்தில் மிதந்த ஆண் பிணம்!

## போலீசார் விசாரணை!!

கோவை, ஆக. 19–

கோவை உக்கடம் சுங்கம் பைபாஸ் ரோட்டில் உள்ள வாலாங்குளத்தில் நேற்று முன்தினம் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் பிண மாக கிடந்தார்.

இதனை பார்த்த அந்த வழி யாக சென்றவர்கள் இதுகுறித்து ரேஸ்கோர்ஸ் போலீஸ் நிலையம், தெற்கு தீயணைப்புநிலையத்துக்கு தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள், போலீசார் ஆகியோர் பிணத்தை மீட்டு பிரேத பரிசோத னைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பிணமாக கிடந்தவர் யார், எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து தெரியவில்லை. இதுகுறித்து போலீசார் வழக் குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### 125 ஆண்டுகள் பழமையான

# முல்லைப் பெரியாறு அணை உடைந்தால் யார் பொறுப்பு!

## மத்திய இணையமைச்சர் சுரேஷ் கோபி கேள்வி!!

திருவனந்தபுரம், ஆக. 19–

125 ஆண்டுகள் பழமையான முல்லைப் பெரியாறு அணை உடைந்தால் அதற்கு யார் பொறுப்பேற்பார்கள் என்று மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி கேள்வி எழுப்பியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில், இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி பேசியதாவது:–



முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த கவலை தெரிவிக்கும் 'பேஸ்புக் பதிவை' அண்மையில் பார்த்தேன். அணை இடிந்து விழுந்து விடுமோ என்ற கேள்வி எனது இதயத்தில் இடி போல் தொடர்ந்து விழுகிறது. அப்படி அணை இடிந்தால் அதற்கு யார் பொறுப்பேற்பார்கள்? தற்போதைய நிலையைத் தொடர தீர்ப்பளிக்கும் நீதிமன்ற ங்கள் பதில் சொல்லுமா அல்லது நீதித் துறையிடம் இருந்து இது போன்ற தீர்ப்புகளை பெற்றுத் தரும் அதிகாரிகள் பதிலளிப்பார்களா? இனி ஒரு முறை கேரளம் கண்ணீரில் மூழ்க முடியாது' என்றார்.

400–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த வயநாடு நிலச்சரிவுக்குப் பிறகு, இடுக்கி மாவட்டத்தில் உள்ள முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து கேரளத்தில் மீண்டும் விவாதங்கள் எழுந்துள்ளன.

தமிழகத்தின் பராமரிப்பில் உள்ள முல்லைப் பெரியாறு அணை முற்றிலும் பாதுகாப்பாக உள்ளது என்பது தமிழகத்தின் நிலைப்பாடாகும். புதிய அணை கட்டப்பட்டால் நீர் திறப்பு உள்ளிட்ட முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கேரளம் வசம் செல்லும்.

இதனிடையே, அணையின் பாதுகாப்பு குறித்து தற்போதைய சூழலில் கவலை வேண்டாம் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்தார். அதேசமயம், இந்த விவகாரத்தில் புதிய அணை கட்டுவது தொடர்பாக மத்திய அரசிடம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க அண்மையில் நடைபெற்ற கேரள அரசின் ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.



மலுமிச்சம் பட்டியில் பூணூல் அணியும் நிகழ்ச்சியில் பாபுஜி சுவாமி பங்கேற்றார்.

### விஸ்வகர்மா சமூக நல சங்கம் சார்பில்

# பூணூல் அணியும் விழா!

## பாபுஜி சாமி பங்கேற்பு!!

கோவை, ஆக.19

கோவை தெற்கு மாவட்ட விஸ்வகர்மா சமூக நல சங்கம்சார்பில் 12ம் ஆண்டு பூணூல் அணியும் விழா ஆவணி அவிட்டம் நிகழ்ச்சி கோவை மாச்சம்பாளையம் திருநகரில் உள்ள சக்தி விநாயகர் கோயிலில் இன்று காலை நடைபெற்றது. மலுமிச்சம்பட்டி ஸ்ரீ நாகசக்தி அம்மன் பீட பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக பாபுஜி சுவாமிகள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். காயத்ரி மந்திரம் கூறி 500க்கும் மேற்பட்டோர் பூணூல் அணிந்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக விஸ்வ பாரத் மக்கள் கட்சி தேசிய தலைவர் வேலுமணி வில்வராஜன், துணைப் பொதுச் செயலாளர் கார்த்திக் வில்வராஜன், கிழக்கு மாவட்ட செயலாளர் இந்துமதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கோவை தெற்கு மாவட்ட நல சங்க தலைவர் லட்சுமணன், செயலாளர் அசோகன், பொருளாளர் ராமசாமி, துணைத்தலைவர்கள் கருப்பையா, கண்ணன் மூர்த்தி, அவை தலைவர் ரங்கசாமி, துணை செயலாளர் கோபால்,வேலு, ரவிக்குமார், இணைச்செயலாளர் சிவ பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.



பல்லடம் நாதகவுண்டன்பாளையத்தில் மறைந்த முன்னாள் கிணத்துக்கடவு எம்.எல்.ஏ., என்.எஸ். பழனிசாமியின் 82–வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது மணி மண்டபத்தை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.எஸ்.எம். ஆனந்தன் மற்றும் எம்.எல்.ஏ.க்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

# மருத்துவர்களின் பாதுகாப்புக்கு தனிச்சட்டம் இயற்ற வேண்டும்!

## பத்ம விருது பெற்ற 71 டாக்டர்கள் பிரதமருக்கு கடிதம்!!

புதுடெல்லி, ஆக. 19–

மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில்மத்திய,மாநில அரசுகள் தனிச்சட்டம் இயற்ற வேண்டும் என 71 மருத்துவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் அரசு மருத்துவமனையில் கடந்த 8ம் தேதி இரவுப் பணியில் இருந்த முதுகலை 2ம் ஆண்டு படித்த பெண் பயிற்சி டாக்டர் பலாத்காரம் செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் மருத்துவமனை கருத்தரங்கு அறையில் கண்டறியப்பட்டது. இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதை கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் வலுத்துள்ளன. இந்த விவகாரத்தில் சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில், மேலும் பலருக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து சிபிஐ தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில் இது குறித்து பத்ம விருதுகள் பெற்ற 71 மருத்துவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளனர். கொல்கத்தா பாலியல் வன்கொடுமை, கொலை சம்பவம், பெண்கள், மருத்துவர்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க உடனடி நடவடிக்கை தேவை என்பதையே காட்டுகின்றது. மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒன்றிய, மாநில அரசுகள் தனிச்சட்டம் இயற்ற வேண்டும்

இவ்வாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இன்றைய நிலவரம்

| | | | |
|---|---|---|---|
| தங்கம் | 22 CT | 1 கிராம் | ரூ. 6,670 |
| | | 8 கிராம் | ரூ. 53,360 |
| | 24 CT | 1 கிராம் | ரூ. 7,125 |
| வெள்ளி | | 1 கிராம் | ரூ. 91.00 |

### பர்கூர் அருகே பள்ளியில் நடந்த கொடூரம்:

# என்.சி.சி. முகாமில் மாணவி பலாத்காரம்; 13 மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு!

## குற்றத்தை மறைத்ததாக தாளாளர், முதல்வர் உள்பட 8 பேர் கைது!!

கிருஷ்ணகிரி, ஆக.19–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளிக்கூடத்திலேயே 8ம் வகுப்பு மாணவி பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் பள்ளி நிர்வாகிகள் உள்பட 8 பேர் கைதானார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே தனியார் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இந்த பள்ளியின் சார் பில் கடந்த 5ந்தேதி முதல் 9ந் தேதி வரையில் தேசிய மாணவர் படை முகாம் பள்ளி வளா கத்தில் நடைபெற்றது. இதில் பள்ளியை சேர்ந்த 17 மாணவிகள் கலந்து கொண்டனர். அவர்கள் பள்ளி வளாகத்தி லேயே தினமும் தங்கி முகா மில் பங்கேற்றனர்.

இந்த நிலையில் முகாமிற்கு சென்ற 8ம் வகுப்பு மாணவி கடந்த 8ந் தேதி அதிகாலை பள்ளி கலையரங்கத்தில் சக மாணவிகளுடன் தூங்கி கொண்டிருந்தார். அப்போது அதிகாலை 3 மணி அளவில், முகாம் பயிற்சியாளரான காவேரிப்பட்டணத்தைசேர்ந்தசிவராமன் (வயது 30) என்பவர் மாணவியை அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து மாணவி, பள்ளியின் முதல்வர் சதீஷ்குமாரிடம் தெரிவித்தார். அவர் இந்த விஷயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என்று கூறியுள்ளார். இதற்கிடையே கடந்த 16–ந் தேதி இரவு மாணவிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது.அப்போது தன்னை பயிற்சியாளர் பலாத்காரம் செய்த சம்பவத்தை தனது தாயாரிடம் கூறியுள்ளார். இதையடுத்து மாணவியை கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

பின்னர் சம்பவம் தொடர்பாக மாணவி அளித்த புகாரின் பேரில் பர்கூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் சூர்யகலா விசாரணை நடத்தி, பயிற்சியாளர்சிவராமன், பள்ளி முதல்வர் சதீஷ்குமார் உள்ளிட்டோர் மீதுபோக்சோ பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்தார்.

இதைத்தொடர்ந்து பள்ளி முதல்வர் சதீஷ்குமார் (35), ஆசிரியை ஜெனிபர் (35), பள்ளி தாளாளர்சாம்சன்வெஸ்லி (52), பயிற்சியாளர்க்ளான சக்திவேல் (39), சிந்து (21), சத்யா (21), சுப்பிரமணி (54) ஆகிய 7 பேரையும் போலீசார் கைது செய்தனர். முக்கிய குற்றவாளியான பயிற்சியாளர் சிவா என்ற சிவராமன் கோவையில் பதுங்கி இருந்தார்.

அவரை போலீசார் கைது செய்ய சென்ற போது தப்பி ஓடினார். அப்போது தவறி கீழே விழுந்ததில் அவரது கால் எலும்பு முறிந்து விட்டது. அவரை போலீசார் கைது செய்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். கைதான சிவராமன் நாம் தமிழர் கட்சியை சேர்ந்தவர். உடனடியாக அவரை கட்சியில் இருந்து நீக்கி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தேசிய மாணவர் படை முகாமிற்கு சென்ற 17 மாணவிகளில், ஒரு வர் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். 13 மாணவிகள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகி உள்ளனர் என்பது போலீசாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. தலைமறைவாக உள்ள பயிற்சியாளர் சிவராமன் நாம் தமிழர் கட்சி இளைஞர் பாசறையின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளராக இருந்தார்.

மாணவி பாலியல் பலாத்காரம் செய்த புகார் தொடர்பாக தற்போது அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.



முக்கிய குற்றவாளி சிவராமன் தப்பி ஓடிய போது தவறி விழுந்ததில் கால் எலும்பு முறிந்தது.

தினந்தோறும் மாலை முரசு படியுங்கள்




தேசிய விருது இயக்குனர் பாலா இயக்கத்தில் அருண் விஜய் நடிப்பில், சுரேஷ் காமாட்சி தயாரிப்பில் உருவாகியுள்ள புதிய படம் 'வணங்கான்'. இந்த படம் ஆரம்பத்தில் சூர்யா நடிப்பில் உருவாகி வந்த நிலையில் திடீரென சூர்யா இந்த படத்தில் இருந்து விலகியதால், அவருக்கு பதிலாக அருண் விஜய் இணைந்தார் என்பதும் இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் முடிவடைந்தது என்பதும் எல்லோருக்கும் தெரிந்தது தான். இந்நிலையில் கடந்த சில நாட்களாக நடந்து வந்த இப்படத்தின் டப்பிங் உள்பட பணிகள் முடிந்தது படத்துக்கு 'யூஏ' சான்றிதழ் கொடுத்துள்ளனர். பாலாவின் 'தாரைதப்பட்டை' மட்டுமே 'ஏ' சான்றிதழ் கிடைத்த நிலையில் மற்ற படங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட 'யூஏ' சான்றிதழ் பெற்றுள்ளது போல் 'வணங்கான்' படமும் 'யூஏ' சான்றிதழ்பெற்றுள்ளதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது.

இதையடுத்து இப் படத்தின் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி தனது சமூக வலைத்தளத்தில் விரைவில் 'வணங்கான்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# 'காந்தி'ன்னு பெயர் வெச்சி இருந்தா, சரக்கு அடிக்கக்கூடாதா?

## – சர்ச்சையில் சிக்கிய வெங்கட்பிரபு!



நடிகர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள தி கோட் படத்தின் டிரைலர் தற்போது வெளியாகியுள்ளது. இப்படத்தின் "டிரைலர் வெளியீட்டை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வெங்கட் பிரபுவிடம், படத்தில் விஜய்க்கு காந்தி என பெயர் வைத்து, அவர் குடிப்பது போல காட்சி வைத்து இருப்பது சரியா என கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதில் அளித்த வெங்கட் பிரபு காந்தின்னு பெயர் வெச்சி இருந்தா, சரக்கு அடிக்கக்கூடாதா? எனக்கு காந்தின்னு ஒரு நண்பன் இருக்கான் அவன் என்னென்ன அட்டகாசம் பண்ணுவான் தெரியுமா. படத்தில் வரும் பெயர் ஏன் நீங்கள் மகாத்மா காந்தியோட ஒப்பிட்டு பேசுகிறீர்கள். இது ஒரு தவறான முன் உதாரணம் என்றவரிடம் இனிமே குடிக்கவே கூடாது என்று மங்காத்தா படத்தில் அஜித் பேசும் வசனம் வருகிறதே. இது அஜித் ரசிகர்களை திருப்திப்படுத்துவதற்காக வைத்த வசனமா என்று கேள்வியும் எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்தவெங்கட்பிரபு, அந்த வசனத்தை அஜித்தை நான்தான் பேசவைத்தேன், இதில் விஜய்யை பேச வைத்து இருக்கிறேன் என்றுகூறினார்.




அப்பா மீடியா தயாரிப்பில் "எங்க அப்பா" என்ற தலைப்பில் புதிய மியூசிக் ஆல்பம் தயாராகி உள்ளது! இதில் ஐந்து வயது குட்டி நடிகை லக்சனா ரிஷி நடித்துள்ளார். லக்சனா ரிஷி இரண்டு வயதில் இருந்தே நடிப்பின் மீது பேரார்வம் கொண்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றை முகபாவனையோடு பேசி வந்தார். தற்போது 'எங்க அப்பா' படப்பிடிப்பில் மலை, காடு, நதி, அருவி ஆகிய பகுதிகளில் பயம் இல்லாமல் நடித்து, படக்குழுவினரின் பாராட்டுக்களை பெற்றுள்ளார். அப்பாவை இறைவனாக நினைக்கும் குழந்தை. தந்தை – மகள் அன்பு தான் கதை. இந்த இசை ஆல்பத்தை எழுதி இயக்கியுள்ளவர் டாக்டர் எஸ். வி.ரிஷி, இப்படத்தின் ஒளிப்பதிவை ரெஜி மற்றும் கணேஷ்கவனிக்க, சந்தோஷ் சாய் இசையமைத்துள்ளார்.

விரைவில் வெளியாகவுள்ள எங்க அப்பாவின் படப்பிடிப்பு கேரள வனப்பகுதி மற்றும் தமிழக எழில் மிகுந்த பகுதிகளில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.



# வெவ்வேறு பின்னணியைச் சேர்ந்த ஏழு பேரைச் சுற்றி வரும் கதை!

இயக்குநர் திரவ் இயக்கத்தில் திரவ்,நிகிலா, விஜய், விபிதா நடித்துள்ள படம் 'டோபமைன் 2.22'.திரவ் இந்தப் படத்தை இயக்கி அதில் முதன்மை கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.

இப்படம் குறித்து இயக்குநர், நடிகர் திரவ் பகிர்ந்துகொண்டதாவது, "'டோபமைன் 2.22' படத்தின் கதை வெவ்வேறு பின்னணியைச் சேர்ந்த ஏழு பேரைச் சுற்றி வருகிறது. அவர்களின் வாழ்க்கை இன்னும் நடக்காத ஒரு கொலையால் இணைக்கப்படுகிறது. அந்த சமயத்தில் அவர்களின் உணர்வுகள் மற்றும் ஒரு விஷயத்திற்கு அடிமையாதல் பற்றிய கதையாக இது நகரும். 18,20 நாட்களில் முழுப் படப்பிடிப்பையும் சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும் படமாக்கி முடித்துள்ளோம். 'குட்நைட்', 'லவ்வர்' படங்கள் புகழ் நிகிலா ஷங்கர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்", "சின்னத்திரை தொடர் ஒன்றில், முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வரும் விஜய் டியூக், யூடியூப் தொடரான, 'ஷாலினி ஸ்டோர்' மூலம் நன்கு அறியப்பட்டவர். அவரும் படத்தில் நடித்திருக்கிறார். இப்படத்தில் மற்றொரு முக்கிய கதாபாத்திரத்தில் 'குற்றம் கடிதல்' புகழ் சத்யா நடித்துள்ளார். விபிதா, சதீஷ், சாம்சன் மற்றும் 'நூடுல்ஸ் படத்தில் நடித்த மாஸ்டர் சக்திவேலன் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர் என்கிறார். இப்படத்திற்கு ஆலன் ஷோஜி இசையமைக்க, பிருத்வி ராஜேந்திரன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.





# தமிழ் ரசிகர்களின் கோபத்துக்கு ஆளான நடிகை சங்கீதா!

தமிழ் சினிமாவில் 90–களில் பிரபல நடிகையாக வலம் வந்தவர் சங்கீதா. தற்போது குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் ஊடகம் ஒன்றில்,, எனக்கு தமிழ் பிடிக்காது, தெலுங்கு தான் பிடிக்கும் என்று பேசி உள்ளது தமிழ் ரசிகர்களை கொதிப்படைய வைத்துள்ளது.

அந்த வீடியோ பேட்டியில் சங்கீதா கூறியுள்ளது இது தான்,எனக்கு தமிழ் பிடிக்கவே பிடிக்காது, தெலுங்கு தான் பிடிக்கும். தற்போது தெலுங்கு படத்தில் தான் நடித்துக்கொண்டு இருக்கிறேன். இதைப்பார்த்து, எவ்வளவு பேர் கோபப்பட்டாலும் அது பத்தி எனக்கு கவலை இல்லை. தெலுங்கு சினிமாவில் கிடைக்கும் மரியாதை, தமிழ் சினிமாவில் கொடுக்க மாட்டார்கள். அது ஏன் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களுக்கு இந்த மனப்பான்மை வருவதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.